வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 22.02.2024 வியாழக்கிழமை இதழ் : 53 பக்கங்கள் : 12

# இலங்கை தமிழரசுக் கட்சி பல கூறுகளாக பிளவடைவு!

## உண்மையை ஏற்கிறார் சீ.வீ.கே.சிவஞானம்



யாழ்ப்பாணம், பெப்ரவரி 22

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர், செயலாளர் தெரிவுக்காக நடந்த வாக்கெடுப்புக்களின் மூலம், கட்சி சில கூறு களாக பிளவுபட்டுள்ளமையை யாரும் மறுதலிக்க முடியாது என வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரி விக்கையில்-

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செய லாளர் கட்சியின் அமைப்பு விதி அல்லது யாப்பின் விதி 7 அ(3) இன்படி பொதுச்சபையினால் தெரிவு செய்யப்படுவார்.

அமைப்பு விதி 13(ஆ) பொதுச் செயலாளரின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை விப ரிக்கிறது. இதன்படி, இவர் கட்சியின் பிரதம செயல் ஆற்றும் உத்தி யோகத்தர் ஆவதுடன் கட்சியின் சகல கிளை களை ஒருமுகப்படுத்தி இணைப்பதுடன் மத்திய அலுவலகத்திற்கு பொறுப்பாகவும் இருப்பார். மிகப்

11

# கச்சதீவு அந்தோனியார் திருவிழாவில் தமிழக பக்தர்கள் புறக்கணிக்க முடிவு

## இந்திய மீனவர் போராட்டத்துக்கு ஆதரவாக

சென்னை, பெப். 22

தாம் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவை புறக்கணிக் கப் போவதாக தமிழக வேர்க்கோடு பங்குத் தந்தை சந்தியாகு அறி வித்துள்ளார்.

இலங்கை அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழக மீனவர்கள் முன் னெடுத்து வரும் போராட்டத்துக்கு ஆத ரவு தெரிவிக்கும் வித மாகவே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தியாவில் இருந்து ஆண்டு நடைபெறவுள்ள கச்சதீவு புனித அந்தோனி யார் ஆலய திருவிழாவுக்கு எவரும் கலந்துகொள்ளப் போவதில்லை. மேலும் வெளிமாவட்டம் வெளி மாநிலங்களில் இருந்து கச்சதீவு திருவிழாவிற்கு படகுகளில் செல்ல பதிவு செய்தவர்கள் வீண் சிர மங்களைத் தவிர்க்க வேண் டும். அவர்கள் விசைப் படக்கிற்கு செலுத்திய பணம் விரைவில் மீண் டும் வழங்கப்படும்-என் றார். (அ)

# சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்

## சஜித் பிரேமதாஸ எச்சரிக்கை

கொழும்பு, பெப். 22

உயர்நீதிமன்றத்தின் தீர்மானங்களுக்கு முரணான வகையில் நிகழ்நிலை காப்புச் சட்டம் பாராளுமன்றத் தில் சட்டவிரோதமான முறையில் நிறைவேற்றப்பட் டது.

சபாநாயகருக்கு சரியான ஆலோசனைகளை வழங்கு வது அதிகாரிகளின் பொறுப்பாகும். குறைப்பாடுகளை திருத்திக்கொள்ளாவிடின்

11

# நீர்வேலியில் நடந்த விபத்தில் யாழ். பல்கலை. மாணவன் பலி!

யாழ்ப்பாணம், பெப். 22

நீர்வேலி பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் யாழ்.பல்கலைகழக மாணவனான ரமேஷ் சகீந்தன் (வயது-22) உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை குறித்த மாணவர் தனது வீட்டி லிருந்து நீர்வேலி நோக்கி மோட்டார் சைக்கிளில் பய ணித்த வேளை வீதியின் குறுக்காக நாயொன்று பாய்ந்ததில் இவ்விபத்து சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

11

# முடிந்தால் தேர்தலில் வென்று காட்டுங்கள்!

## எதிர்க்கட்சிகளுக்கு அமைச்சர் நிமல் சவால்

கொழும்பு, பெப். 22

ஜனாதிபதித் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படும். முடிந்தால் ஜனாதிபதித் தேர்தலில் வென்று காட்டுங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு சவால் விடுக்கி றேன் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற

11

# சரத் பொன்சேகாவை அழைக்கும் மொட்டு!

கொழும்பு, பெப். 22

"சரத் பொன்சேகா பாவம், அவர் பொதுஜன பெர முன கட்சி வந்தால் அவரை மஹிந்த ராஜபக்ச ஏற்பார்." - என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸா நாயக்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நடை பெற்ற ஊடக சந்திப்பின்போது, சரத் பொன் சேகாவுக்கு மஹிந்தவின் சலூன் கதவு திறக்கப் படுமா என எழுப் பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே

11



# ஜனாதிபதித் தேர்தல் ஒக்ரோபரில் நடக்கும்!

## அறிவித்தார் அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, பெப். 22

"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பில் அரச தரப்பில் இருந்து எந்த வொரு யோசனையும் முன்வைக்கப்படவில்லை. தற் போது அதனை செய்வதற்கான உத்தேசமும் அரசுக்கு இல்லை. எனவே, தேர்தல் ஒக்ரோபர் மாதமளவில் நிச்ச யம் நடத்தப்படும்."

- இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுமா என

11

# 22ஆவது அரசமைப்பு திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு!

கொழும்பு, பெப். 22

22 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவினால் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

தனிநபர் பிரேரணையாக அவர் இதனை முன்வைத் துள்ளார். மாகாண சபைகளில் இருந்து காவல்துறை அதிகாரங் களை நீக்குதல் உள்ளிட்ட பல விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு காவல்துறை அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.

குறித்த பொலிஸ் அதிகாரங்களை நீக்குவது தொடர் பில் பாராளுமன்றத்தில் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படு வது இதுவே முதல் தடவையாகும். (அ)

# தேர்தலுக்கு முன்னர் எட்கா உடன்பாடு!

கொழும்பு, பெப். 22

2024-25 இற்கு இடைப்பட்ட நிதியாண்டுக்குள் இரு தரப்பு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காக இந்தியாவு டன் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட இலங்கை தீர்மானித் துள்ளது.

ஒப்பந்தம் தொடர்பில் இந்தியாவின் தரப்பில் அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2024 ஜனவரியில் இடம்பெற்ற 13ஆவது சுற்றுப் பேச்சுகளில் பெரும்பாலான விடயங்களில் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

11

# உலகெங்கும் தமிழ்மொழி பரந்து விரிந்து வளர்கிறது

## பாராளுமன்றில் சார்ள்ஸ் புகழாரம்

கொழும்பு, பெப். 22

தென்னிலங்கை ஆட்சியாளர்களினால் தமிழனத்தை அழிப்பதற்கு தொடர்ச்சியான நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்ற போதிலும் உலகெங்கும் தமிழ் மொழி பரந்துவிரிந்து வளர்ந்து வருவதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

11

# இப்படியும் நடக்கிறது

வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் ஐயா நேற்று ஒரு ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தியிருந்தது வாசகர்களுக்கு தெரிந்திருக்கலாம். அந்த ஊடக சந்திப்பின் நோக்கம், தமிழ் அரசு கட்சியில் தற்போது நிலவும் உட்கட்சி நெருக்கடி பற்றிய சில விடயங்களை தெளிவுபடுத்துவதுதான்.

ஆனால், அதனையும் அவர் தனது மாகாண சபை அவைத் தலைவர் என்ற ஸ்தானத்தில் இருந்து செய்தாரா அல்லது கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் என்ற ஸ்தானத்தில் இருந்து செய்தாரா என்பது தெரியவில்லை.

அதுவல்ல, இங்கே நாம் கவனிக்க வேண்டியது, அந்த ஊடக சந்திப்பு முடிவடைந்த பின்னர், அவர் அங்கு தான் தெரிவித்தவற்றையே விளக்கமாக எழுதி ஊடகங்களுக்கு மின் அஞ்சலிலும் அனுப்பியிருக்கிறார். தான் சொன்னதை ஊடகர்கள் புரிந்திருப்பார்களோ என்ற சந்தேகமாகவும் இருக்கலாம்.

அண்மையில் தமிழ் அரசின் பொதுச்செயலாளர் பதவியின் முக்கியத்துவம் குறித்து பத்திரிகைகளில் பேசப்படுவது பற்றியே அவர் முக்கியமாக விளக்கிக் கூறியிருந்தார். பொதுச்செய லாளரே தேசியப்பட்டியல் மூலம் தெரிவுசெய்யப்பட்டவரின் பெயர் விபரங்களை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டியவர் என்பதால், அடுத்த பாராளுமன்ற தேர்தலில் அந்த பதவியை பெறுவதற்காகவே பொதுச்செயலாளர் பதவியில் பலரும் அக்கறை காட்டுகின்றனர் என எழுதப்படுவது தவறான கருத்து என்பதை சொல்லி வைக்கவே அவர் முக்கியமாக இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்தார் என்பதையும் புரிந்து கொள்ளமுடிகின்றது.

இந்தக் கருத்து 2020ஆம் ஆண்டின் பாராளுமன்ற தேசியப் பட்டியல் நியமனத்தை அப்போதைய பொதுச் செயலாளர் கட்சியின் முறைப்படியான அங்கீகாரம் எதுவும் இல்லாமல் தலைவரின் ஒப்புதலின்றி மேற்கொண்டதை உதாரணமாக கொண்டதன் அடிப்படையில் எழுந்திருக்காலம் என்றும் தெரிவித்திருக்கும் அவர், அதுவும் தவறான கருத்து எனவும் கட்சித் தலைவரினதும் கட்சியின் அங்கீகாரமும் பெறாத அந்த நியமனத்தை இரண்டு நாட்களுக்குள்ளே ஆட்சேபித்திருந்தால் அந்த நியமனத்தை இரத்துச் செய்திருக்கலாம். ஆனால் அது பிரதேச வாதத்துக்கு இடமளிக்கும் என்பதாலேயே அவ்வாறு செய்யவில்லை என்றும் விளக்கமளித்திருக்கிறார்.

உண்மைதான், ஆனால் அப்படி ஆட்சேபனை தெரிவிக்காதது பிரதேச வாதத்துக்கு இடமளிக்கும் என்பதால் ஆட்சேபனை செய்ய முடியாததுபோல, அடுத்த தேர்தலிலும் தலைவரின் அனுமதியோ கட்சியின் அனுமதியோ பெறப்படாமல் செயலாளர் தன்னிச்சையாக செய்தாலும் அந்த நியமனமும் பிரதேச வாதத்துக்கு இடமளிக்குமான நிலை இருந்தால், அப்போதும் ஆட்சேபிக்க முடியாத நிலைதானே ஏற்படும் என்பதையும் அவர் ஏற்றுக் கொண்டிருப்பார். ஆக, செயலாளர் என்பவர் கட்சியின் முதல்வரான தலைவரின் - அதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட தலைவருடன் சேர்ந்து பணியாற்றக்கூடியவராக இருக்கவேண்டும் என்பதையும் அவர் ஏற்றுக்கொள்வார் என்று நம்பலாம்.

அதுவல்ல, இங்கே நாம் சொல்ல வருவது:

‘கட்சியின் தலைவர் உள்ளிட்ட சகல பதவிகளுக்குமான தெரிவு வாக்கெடுப்பு போட்டி மூலம் இடம்பெறுவது முழுமையாக தவிர்க்கப்படல் வேண்டும் என்ற எனது ஆணித்தரமான கருத்தை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். அவ்வாறுதான் கடந்த 74 வருடங்களாக நிகழ்ந்து வருகின்றது’ என்றும் அவர் கூறியிருப்பதுதான் வேடிக்கையாக இருந்தது.

‘ஜனநாயகம் என்ற பெயரில் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தக்கூடிய எந்தப் பதவிக்கும் வாக்கெடுப்பு கட்சி நலன் கருதி இடம்பெறக்கூடாது என்பதே எனது திடமான நிலைப்பாடு. அப்படி ஒரு நிகழ்வு இடம்பெற்றால் அதில் நான் நிச்சயமாக கலந்து கொள்ள மாட்டேன்’ என்றும் சிவஞானம் ஐயா தெரிவித்திருக்கிறார்.

கட்சித் தலைவர் பதவிக்கு சிறீதரனும் சுமந்திரனும் போட்டியிடப்போவதாக பல மாதங்களாகவே பகிரங்கமாகக் கூறிக்கொண்டிருந்த போது-

அவர் இதனைக் கூறியிருக்காவிட்டாலும் பரவாயில்லை, அவர்களில் ஒருவரை கட்சித் தலைவராக முதலாமாளாக முன்மொழிந்து கையெழுத்து வைத்துவிட்டு, அதாவது கட்சியின் தலைவர் பதவிக்கான தேர்தலுக்கு பிள்ளையார் சுழி போட்டுவிட்டு இப்போது இப்படிக் கூறுவதுதான் உச்ச ‘அரசியல்’!

**- ஊர்க்குருவி.**

# இலங்கைக்கு படையெடுக்கும் சுற்றுலாப் பயணிகள்

கொழும்பு, பெப். 22

நாட்டில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெப்ரவரி மாதத்தின் முதல் 18 நாட்களில் மாத்திரம் 138,000 இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியில் 107,639 பயணிகள் மாத்திரமே நாட்டிற்கு வருகை தந்திருந்தனர்.

இவ்வாறான அதிகரிப்பு தொடருமாயின் 2024 ஆம் ஆண்டின் மூன்றாவது மாதத்திலும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 200,000 ஐ எட்டும் என கணிக்கப்பட்டுள்ளது.

நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நாளொன்றுக்கு 7,707 ஆக அதிகரித்துள்ளதுடன் வாராந்த எண்ணிக்கை 53, 000 ஆக அதிகரித்துள்ளது.

பெப்ரவரி மாதத்தின் முதல் முதல் இரண்டு வாரங்களில் விமானத்தினூடாக பயணம் செய்வதர்களை விடவும் கடல் மாரக்கத்தினூடாகவே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

அந்த வகையில் மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ரஷ்யா 14 வீதத்தினைக் கொண்டுள்ளதுடன் இந்தியா 13 சதவீதத்தினைக் கொண்டுள்ளது.

எவ்வாறாயினும் தொழிற்துறை தரவுகளின்படி, கிடைக்கப்பெறும் வருமானம் மதிப்பிடப்பட்டளவில் கிடைக்கவில்லையென சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த மாதத்திற்கான இதுவரையான காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 10 சத வீதத்துடன் ஐக்கிய இராச்சியம் மூன்றாவது இடத்தில் உள்ளது.

இதேவேளை, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே கடற் பயணத்தை மேம்படுத்த அமைச்சரவை நேற்று (20) அனுமதி வழங்கியுள்ள நிலையில் மேலும் கடல் மார்க்கத்திலான சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(அ)

# ஓட்டோ மீது கும்பலொன்று தாக்குதல்!

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ்ப்பாணத்தில் இருந்து ஆவரங்கால் பகுதியை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த ஓட்டோவை வன்முறை கும்பல் ஒன்று வீதியில் இடைமறித்து தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

முச்சக்கர வண்டி சாரதியை தாக்க முற்பட்ட வேளை, சாரதி அவல குரல் எழுப்பவே அயலவர்கள் கூடியதால் தாக்குதலை நடத்தியவர்கள் சம்பவ இடத்தில் இருந்து தப்பியோடியுள்ளனர்.

சம்பவத்தில் ஓட்டோ முன் பக்க கண்ணாடி முற்றாக சேதமடைந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் ஓட்டோ சாரதி அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

(அ)

# மாணவர்கள் மீது வாள்வெட்டு

யாழ்ப்பாணம், பெப். 22

பருத்தித்துறை பகுதியில் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த மாணவர்கள் இருவர் மீது, வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாலை இந்த வாள் வெட்டு தாக்குதலை நடத்தி விட்டு சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த இரு மாணவர்களும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாள் வெட்டு தாக்குதலுக்குக் காரணம் தெரியாத நிலையில் பருத்தித்துறை பொலிஸார் மாணவர்களிடம் வாக்குமூலங்களைப் பெற்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# பிரதேச சபை டிராக்டரில் டீசல் திருடிய மூவர் கைது

கொழும்பு, பெப். 22

ஹல்துமுல்ல பிரதேச சபையின் உழவு இயந்திரத்தில் டீசல் திருடிய குற்றச்சாட்டின் பேரில் மூவர் நேற்று புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக ஹல்துமுல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

ஹல்துமுல்ல பிரதேச சபையின் செயலாளர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஹல்துமுல்ல உள்ளூராட்சி சபையின் துப்புரவு பணியாளர், காவலாளர், ஊழியர் ஆகிய மூவருமே கைதாகியுள்ளனர்.

குறித்த சம்பவம் உள்ளூராட்சி சபை வளாகத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராக்களில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஆறு மாவட்டங்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, பெப். 22

நாட்டில் பல மாவட்டங்களில் வெப்பநிலை திடீரென அதிகரித்துள்ளது. இதன் காரணமாக 6 மாவட்டங்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இன்று வியாழக்கிழமை வடமேற்கு மாகாணம், கம்பஹா, கொழும்பு, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டம் மாவட்டங்களில் அதிக வெப்ப நிலை பதிவாகும் என்று தெரிவித்துள்ளது.

இந்த மாவட்டங்களில் இயல்பை விட அதிகமாக வெப்பநிலை காணப்படும் என தெரிவித்துள்ளது.

வெளியிடங்களில் தேவையற்ற விதமாக நடமாடுவதை தவிர்க்குமாறும், அதிக நீரை பருகுமாறும், வெளிர்நிறத்திலான மெல்லிய ஆடையை அணியுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# கூரை சரி செய்ய சென்றவர் தவறி வீழ்ந்து பலி

கொழும்பு, பெப். 22

புலத்சிங்கள, தெனிகடே சந்தியில் அமைந்துள்ள வீடொன்றின் கூரையை சரி செய்வதற்கு சென்ற ஒருவர் மாடியிலிருந்து தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் தெரணியகல பிரதேசத்தை சேர்ந்த 50 வயதுடையவராவார்.

இவர் புலத்சிங்கள பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் கூரையை சரி செய்வதற்கு சென்றிருந்த போது மாடியிலிருந்து தவறி வீழ்ந்து காயமடைந்துள்ளார்.

இந்நிலையில், காயமடைந்தவர் புலத்சிங்கள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

ஈழநாடு
Eelanadu
22.02.2024 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், மாசி 10

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ராஜபக்ஷக்களின் கதை முடியுமா?

முன் கூட்டியே நாடாளுமன்ற தேர்தல் இடம்பெறுவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் – அப்போது, ராஜபக்ஷக்கள் முழுமையாக துடைத்தெறியப் படுவார்கள் என்றும் பட்டலி சம்பிக்க ரணவக்க தெரித்திருக்கின்றார். உண்மையிலேயே ராஜபக்ஷக்கள் துடைத்தெறியப்படுவார்களா?

சிங்கள மக்களே ராஜபக்சக்களை அதிகாரத்திற்கு கொண்டு வந்தவர்கள். 2005இல், விடுதலைப் புலிகளின் தேர்தல் பகிஷ்கரிப்பால், மகிந்த ராஜபக்ஷவிற்கு ஜனாதிபதியாகும் வாய்ப்பு கிடைத்தது. விடுதலைப் புலிகள், ஜனாதிபதித் தேர்தலை பகிஷஷ்கரிக்காது விட்டிருந்தால் தமிழ் மக்கள் ரணில் விக்கிரமசிங்கவிற்கே வாக்களித்திருப்பர். தேர்தல் பகிஷ் கரிப்பால் அதிகாரம் ராஜபக்ஷவின் வசமானது.

2005இல் பறிபோன ஜனாதிபதி வாய்ப்பை, அதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்கவால் எட்டித் தொடவே முடியவில்லை. ராஜபக்ஷக்களுக்கு எதிராக சிங்கள மக்கள் கிளர்ந்ததை தொடர்ந்தே, ரணிலுக்கு வாய்ப்பு கிட்டியது. ஆனால், ரணிலைப் பொறுத்தவரையில், ஒரு முறையாவது மக்களின் ஆணையுடன் ஜனாதிபதி கதிரையை தொடும் பாக்கியமோ, இப்போதும் ஊசலாடிக் கொண்டுதான் இருக்கின்றது. இவ்வாறானதாரு பின்புலத்தில்தான், அரசியலில், பலமற்ற நிலையிலிருக்கும் சம்பிக்க ரணவக்க ராஜபக்ஷக்களின் எதிர்காலம் தொடர்பில் ஆருடம் கூறுகின்றார்.

ராஜபக்ஷக்களின் எழுச்சி அரசியல் தற்செயலாக நிகழவில்லை. விடுதலைப் புலிகளின் தேர்தல் பகிஷ்கரிப்பால், மிகவும் பலவீனமான நிலையில் அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்ட மகிந்த ராஜபக்ஷ, அதே விடுதலைப் புலிகள் அமைப்பை துடைத்து அழித்ததன் மூலமாக, சிங்கள மக்கள் மத்தியில் பெருந் தலைவரானார். அதன் பின்னர் மகிந்த ராஜபக்ஷவின் எல்லையற்ற அதிகாரமும், சனவசியமும் அவரது குடும்பத்திற்கு சொந்தமாகிப் போனது. ஆனால், 2015இல், அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து, வீழ்த்தவே முடியாதென்று கருதிய மகிந்த ராஜபக்ஷவை தோற்கடித்தனர். இப்போது சம்பிக்க கூறுவது போன்றுதான் – அப்போதைய பார்வையும் இருந்தது. இத்துடன் ராஜபக்ஷக்களின் கதை முடிந்தது. ஆனால், கோட்டாபயவின் எழுச்சியை தொடர்ந்து, அந்த ஆருடம் பிழைத்துப் போனது.

கோட்டாபயவின் திறமையால் அவர் வெற்றிபெறவில்லை. மாறாக ரணில் – மைத்திரி ஆட்சிக்காலத்தின் குளறுபடிகள், அதிகார மோதல்கள், இவ்வாறான சூழலில் இடம்பெற்ற ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதல் – அதனால் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்ட அச்சவுணர்வு, இவ்வாறான காரணங்கள் அனைத்தும் கோட்டாபயவுக்கு வாய்ப்பாக மாறியது. ஏற்கனவே தன்னை அடுத்த ஜனாதிபதிக்கான நிகரற்ற ஒருவராக தயார் செய்து கொண்டிருந்த கோட்டாபய, நிலைமைகளை தனக்கு சாதகமாக்கிக் கொண்டு, சிங்கள மக்களின் ஆதரவுடன் மட்டும் வெற்றிபெற்றார். இலங்கையின் அரசியல் வரலாற்றில் இதுவரையில் எந்தவொரு ஜனாதிபதியும் அடையாத சிங்கள தேசியவாத உச்சத்தை கோட்டாபயவினால் தொட முடிந்தது.

கோட்டாபயவினால் மட்டுமே தங்களை பாதுகாக்க முடியுமென்னும் எண்ணத்திலேயே சிங்கள மக்கள் அவரை ஆதரித்திருந்தனர். ஆனால், தங்களது எதிர்பார்ப்பு தவறானது என்பதை அவர்கள் உணர்ந்த போது, ஆதரித்தவர்களே கோட்டாபயவிற்கு எதிராக திரண்டனர். இலங்கையின் வரலாற்றில் ஆட்சியை தொடர முடியாமல், இடைநடுவில் ஓடிப்போன, எங்கு போவதென்று தெரியாமல் வெளிநாடுகளில் அலைந்து திரிந்த ஜனாதிபதி என்னும் வரலாறும் கோட்டாபயவுக்கு மட்டுமே உண்டு. கோட்டாபயவின் வீழ்ச்சியே, ராஜபக்ஷ குடும்பத்தில் ஒட்டுமொத்த சரிவானது. ஆனால், அவர்களின் தவறுகளுக்காக அவர்களுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையையும் ரணில் முன்னெடுக்கவில்லை. ரணில் அவர்களை பாதுகாப்பதான ஒரு தோற்றமே இன்றுவரையிலுண்டு.

ஒரு வேளை, சம்பிக்க கூறுவது போன்று, நாடாளுமன்ற தேர்தல் முன்கூட்டியே இடம்பெறுமனால், ராஜபக்ஷக்களின் உண்மையான நிலைமையை அறிந்து கொள்ள முடியும். அப்போது, அவர்கள் துடைத் தெறியப்பட்டிருக்கின்றார்களா அல்லது மீண்டும் எழக் கூடிய வாய்ப்பை கொண்டிருக்கின்றனரா என்பதை அறிந்து கொள்ளலாம். இலங்கையின் சிங்கள அரசியல் வரலாற்றில் இலகுவான கணிப்புக்களை செய்ய முடியுமா என்பதுதான் கேள்வி.

# இலங்கை- இந்திய கடல் போக்குவரத்தை ஊக்குவிப்பதற்கு அரசு விசேட நடவடிக்கை

கொழும்பு, பெப். 22

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கடல் வழிப் பயணிகள் போக்குவரத்தை ஊக்குவிப்பதன் மூலம் இருநாடுகளுக்கிடையில் சுற்றுலாப் பயணிகளுக்கு அணுகக்கூடிய இயலுமையை அதிகமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறையை ஊக்குவித்தல், மேம்படுத்தப்பட்ட தொடர்புகள் மூலம் கலாச்சார பரிமாற்றங்கள், கல்வி, சமய, கலாசார செயற்பாடுகள், கலை, விளையாட்டு போன்ற துறைகளில் ஒத்துழைப்புக்களை ஊக்குவிப்பதற்கும் இதன் ஊடாக இயலுமை உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்காக குறைந்த செலவிலான சுற்றுலா மற்றும் போக்குவரத்துக் கட்டண முறையொன்றை அறிமுகப் படுத்த வேண்டியுள்ளது. அதற்கமைய பயணிகள் போக்குவரத்துப் படகுகள் மற்றும் கப்பல்கள் மூலம் இலங்கையிலிருந்து வெளியேறிச் செல்லும் பயணிகளிடமிருந்து தற்போது அறிவிடப்படும் வெளிச் செல்லல் வரி முறையே 5 அமெரிக்க டொலர்கள் மற்றும் 20 அமெரிக்க டொலர்களாகக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், படகுப் பயணி ஒருவருக்கு 60 கிலோகிராம் வரையான பயணப் பொதிக் கட்டணத்தை இலவசமாக வழங்குவதற்கும் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# கிழக்கில் இலங்கை கல்வி நிர்வாக சேவை அலுவலர் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்

திருமலை, பெப். 22

இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர் தாக்கப்பட்டமையை எதிர்த்து நேற்று புதன் கிழமை கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாண பிரதி கல்வி பணிப்பாளரான எஸ். துஸ்யந்தன் என்பவரை இலங்கை ஆசிரியர் சங்க பிரதிநிதி பீ. உதயரூபன் கடமை நேரத்தில் தாக்கியதாகவும் இதனை வன்மையாக கண்டிப்பதாகவும் தெரிவித்தே இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பிரதி கல்விப் பணிப்பாளர் திருகோணமலை பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ள துடன் தாக்குதல் நடத்திய குறித்த ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க் கிழமை 20 ஆம் திகதி மாகாண கல்வித் திணைக்களத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் இடமாற்றங்கள் தொடர்பான மேல்முறையீட்டு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பிரசன்னமாகி இருந்த மேல் முறையீட்டு சபையின் பிரதிநிதி இல்லாத இலங்கை ஆசிரியர் சங்க உறுப்பினர் பீ. உதயரூபன் கூட்டம் ஆரம்பிப்பதற்கு முதல் மாகாண கல்வி பணிப்பாளரை நோக்கி இழிச்சொல் பிரயோகம் செய்ததுடன், பிரதி கல்விப் பணிப்பாளரை தாக்கியதாகவும் இதனை வன்மையாக கண்டிப்பதாகவும் தெரிவித்து அலுவலக ஊழியர்கள் அமைதியான முறையில் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். (அ)

# கேரளாவிலிருந்து இலங்கைக்கு விமான சேவை அதிகரிக்கப்படும்

கொழும்பு, பெப். 22

இந்தியா - கேரளாவில் உள்ள கோழிக்கோடு விமான நிலையத்தில் இருந்து இலங்கை, மலேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான விமான சேவைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக சில விமான சேவை நிறுவனங்கள் இணக்கம் வெளியிட்டுள்ளதாக இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மலேசியாவை தளமாக கொண்ட எயார் ஏசியா மற்றும் பிட்ஸ் எயார் உள்ளிட்ட விமான சேவை நிறுவனங்கள் தங்களது விருப்பத்தை வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பெப்ரவரி - 22 வியாழக்கிழமை
சோபகிருது வருடம் - மாசி 10
நல்ல நேரம் : 02.01 - 03.31
ராகு காலம் : 08.01 - 09.31
திதி : துவாதசி




**மேடம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வாகனத்தை சரி செய்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் தொடர்பு கிடைக்கும்.

**மிதுனம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புது தொடர்புகிடைக்கும். அங்கீகாரம் கிடைக்கும்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். குடும்பத்தில் பிரச்னைகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் கூடுதல் வேலையைப் பார்க்க வேண்டி வரும்.

**சிம்மம்**
முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். சிலர் உங்களை தாழ்த்திப் பேசினாலும் கலங்காதீர்கள். சகோதரர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**கன்னி**
உங்களின் அணுகு முறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப நீங்கள் மாற்றியமைத்துக் கொள்வீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். வாகனம் தொந்தரவு தரும்.

**துலாம்**
மற்றவர்களால் செய்ய முடியாத செயற்கரிய காரியங்களையெல்லாம் முடித்துக் காட்டுவீர்கள். உறவினர் நண்பர்களால் ஆதாயம் உண்டு. திடீர் சந்திப்புகள் நிகழும். புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**விருட்சிகம்**
உற்சாகம் அடைவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் விலகும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். மற்றவர்களை முழுமையாக நம்பிக் கொண்டிருக்க வேண்டாம்.

**மகரம்**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். கல்யாண பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கும்பம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும்.

**மீனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். புதியவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் லாபம் கிடைக்கும்.

# இலங்கை சிறையிலுள்ள மீனவர்களை விடுவிக்குமாறு இராமேஸ்வரத்தில் பேரணி



இராமேஸ்வரம், பெப். 22

இலங்கை சிறையிலுள்ள மீனவர்களை விடுதலை செய்யக் கோரி இராமேஸ்வரத்திலிருந்து பாம்பன் வரை நேற்று முன்தினம் மீனவர்கள் பேரணி நடத்தினர்.

எல்லை தாண்டி மீன் பிடித்த கடந்த 3ஆம் திகதி இராமேஸ்வரத்தை சேர்ந்த 23 மீனவர்களையும், அவர்களது 2 விசைப் படகுகளையும் இலங்கை கடற்படை சிறை பிடித்தது. கைது செய்யப்பட்ட 23 மீனவர்களில் 20 பேரை விடுதலை செய்த நீதிமன்றம் மூவருக்கு சிறைத் தண்டனை விதித்தது.

இதைக் கண்டித்தும், மீனவர்களின் சிறை தண்டனையை இரத்து செய்யக் கோரியும் இராமேஸ்வரத்தில் விசைப் படகு மீனவர்கள் கடந்த 17ஆம் திகதி முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.


வேலைநிறுத்தத்தின் 4ஆவது நாளான நேற்றுமுன்தினம் இராமேஸ்வரம் மீன்பிடி இறங்கு தளத்திலிருந்து பேரணியாகச் சென்று இராமநாதபுரம் ஆட்சியர் பணிமனையை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்த திட்டமிட்டிருந்தனர்.

இதன்படி நடைபெற்ற இந்தப் பேரணியில் பெண்கள் உட்பட 1,000-க்கும் மேற்பட்ட மீனவர்கள் பங்கேற்றனர். பேரணி பாம்பனை அடைந்த போது இராமநாதபுரம் ஆட்சியர் பா.விஷ்ணு சந்திரன் மீனவர்களை சந்தித்து, பேச்சு நடத்தினார்.

அப்போது, மீனவர்களை விரைவில் விடுதலை செய்ய அனைத்து நடவடிக்கைகளும் மத்திய, மாநில அரசுகள் மூலம் மேற்கொள்ளப்படும் என்று அவர் உறுதி அளித்தார்.

இதையடுத்து, பணிமனையை முற்றுகையிடும் போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக மீனவர்கள் அறிவித்தனர். மேலும், தமிழக மீனவர்களை விடுதலை செய்யாவிட்டால் கச்சதீவு திருவிழாவைப் புறக்கணிக்கப் போவதாகவும், மீனவர்களின் வேலைநிறுத்தப் போராட்டமும் தொடர்ந்து நடைபெறும் என்றும் மீனவர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

# மீண்டும் மாநிலங்களவை எம். பி. ஆனார் முருகன்



புதுடில்லி, பெப். 22

மாநிலங்களவை எம்.பியாக எல். முருகன் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

மத்திய தகவல் மற்றும் ஒலி பரப்பு துறையின் இணை அமைச்சராக இருப்பவர் எல். முருகன். இவர் மாநிலங்களவை எம். பியாக தெரிவு செய்யப்பட்டு மத்திய இணையமைச்சராக செயல்பட்டு வருகிறார். இவரது மாநிலங்களவை எம். பி. பதவிக்காலம் முடிவுக்கு வர உள்ளார். இதையடுத்து அவர் மீண்டும் மத்தியப் பிரதேசத்திலிருந்து மாநிலங்களவை எம். பியாக வேட்பு மனுத்தாக்கல் செய்தார்.

மாநிலங்களவை எம். பிக்கள் என்பது கட்சி எம். எல். ஏக்கள் மூலம் தேர்வு செய்யப்படுவார்கள். மத்திய பிரதேசத்தில் பா. ஜ. க. ஆட்சி நடக்கிறது. இங்கு மொத்தம் 230 சட்டசபை தொகுதிகள் உள்ளன. கடந்த ஆண்டு இறுதியில் நடந்த தேர்தலில் பா. ஜ. க. 163 தொகுதிகளில் வெற்றி பெற்றது. காங்கிரஸ் கட்சி 66 தொகுதிகளை மட்டும் கைப்பற்றியிருந்தது.

இந்நிலையில் தான் மத்திய பிரதேசத்தில் காலியான 5 மாநிலங்களவை எம். பி. பதவிக்குத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. அதன்படி பா.ஜ. க. சார்பில் மத்திய இணையமைச்சர் எல். முருகன், உமேஷ்நாத் மகாராஜ், பன்சிலால் குர்ஜார், மாயா நாரோலியா மற்றும் காங்கிரஸ் சார்பில் அசோக் சிங் ஆகியோர் மனுத்தாக்கல் செய்தார்.

காலியான 5 இடங்களுக்கு 5 பேர் மட்டுமே மனுத்தாக்கல் செய்த நிலையில் அவர்கள் 5 பேரும் போட்டியின்றி நேரடியாக மாநிலங்களவை எம். பியாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதன்மூலம் எல் முருகன் அடுத்த 6 ஆண்டுகள் மாநிலங்களவை எம். பியாக தொடர உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாராளுமன்ற தேர்தலில் விடுதலை சிறுத்தைகள் தென் மாநிலங்கள் அனைத்திலும் போட்டியிடும்

## திருமாவளவன் அறிவிப்பு

புதுடில்லி, பெப். 22

“தமிழகம், ஆந்திரா, கர்நாடகா, கேரளா, தெலுங்கானா ஆகிய தென் மாநிலங்கள் அனைத்திலும், வரும் பாராளுமன்ற தேர்தலில் விடுதலை சிறுத்தைகள் இயக்கம் போட்டியிடும்,” என அந்த கட்சியின் தலைவர் திருமாவளவன் கூறினார்.

டில்லியில், அவர் அளித்த பேட்டியில்,

வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழகம் மட்டுமல்லாது, பிற தென் மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா, கேரளா, தெலுங்கானா ஆகியவற்றிலும் எங்கள் கட்சியின் சார்பில் வேட்பாளர்கள் களம் இறங்கவுள்ளனர்.

இதற்கு வசதியாக பொதுச் சின்னம் தேவைப்படுகிறது. எங்களது பானை சின்னத்தையே பொதுச்சின்னமாக ஒதுக்கீடு செய்யும்படி தேர்தல் ஆணையத்திடம் கோரிக்கை மனு அளித்துள்ளோம்.

அதனால் பொதுச்சின்னம் கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. அதேசமயம், தேர்தல் சின்னங்கள் ஒதுக்கீடு செய்வதில் பாரபட்சமாக செயல்படுவதாக தேசியவாத காங்கிரஸின் மூத்த தலைவர் சரத் பவார் சந்தேகம் எழுப்பியுள்ளார்.

தேர்தல் ஆணையம் சுதந்திரமாக செயல்பட வேண்டுமென்று ஒட்டுமொத்த மக்களும் எதிர்பார்க்கின்றனர். அதை தேர்தல் ஆணையம் நிறைவேற்றும் என்றும் நம்புகிறோம்.

கடந்த சட்டசபை தேர்தலின்போது ஆறு தொகுதிகளில் பானை சின்னத்தில்தான் நின்றோம். யாரிடம் இருந்தும் நெருக்கடி இல்லை.

அதேசமயம், 2019 பாராளுமன்ற தேர்தலின்போது வெற்றியை மட்டுமே இலக்காக வைத்து, அவர்களது சின்னத்தில் போட்டியிடும்படி, தி.மு.க., ஆலோசனையை வழங்கியது.

வரும் பாராளுமன்றத் தேர்தலில் பானை சின்னத்தில் எங்கள் கட்சி போட்டியிடும். அதற்கு எந்த சிக்கலும் இல்லை.

விடுதலை சிறுத்தைகளுக்கு, தி.மு.க., கூட்டணியில் பொதுத்தொகுதி கேட்பது குறித்து பலரும் ஆச்சரியமாகக் கேட்கின்றனர். ஏன், நாங்கள் பொதுத் தொகுதியில் போட்டியிடக் கூடாதா? - என்றார். (ஐ)

# இரணைமடு குளத்தையும் வயல்களையும் மணல் அகழ்வோரிடமிருந்து காப்பாற்றுக!

## பிரதேச மக்கள் அவசர கோரிக்கை

கிளிநொச்சி, பெப். 22

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் பகுதியில் மிக மோசமாக அதிகரித்துள்ள சட்டவிரோத மணல் அகழ்வினால் இரணைமடுகுளத்திற்கும் அதனை சூழவுள்ள வயல் நிலங்களுக்கும் பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றும் இந்த நிலைமை தொடர்ந்தால் நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்களை இழக்க நேரிடுவதோடு, இரணை மடுகுளத்திற்கும் பெரும் பாதிப்பு ஏற்படும் என்றும் எனவே குளத்தையும் வயலையும் காப்பாற்ற விரைந்து நடவடிக்கை எடுங்கள் என உரிய தரப்பினர்களிடம் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இரணைமடுகுளத்திற்கு கீழ் கோரமோட்டை ஆற்றுப்பகுதியிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் சமீப காலமாக சட்டவிரோத மணல் அகழ்வு கட்டுக்கடங்காது மிக மோசமாக அதிகரித்துள்ளது.

இது தொடர்பில் உரிய தரப்பினர்களுக்கு தகவல் வழங்கும் சமூக செயற்பாட்டாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவதோடு, அவர்களின் வீடுகளுக்குள் பட்டாசுகளை கொளுத்தி எறிந்து எச்சரிக்கை விடும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

இதனால் கண் முன்னே இடம்பெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் பலர் மௌனமாக கடந்து சென்று விடுகின்றனர் எனத் தெரிவித்துள்ள பிரதேசவாசி ஒருவர், இவ்வாறு சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றவர்களுக்கு பொலீஸ், பாதுகாப்புத் தரப்பினர்கள், அரசில்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் செல்வாக்கு இருப்பதாகவும் இதனால் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் எவரும் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை என்றும் குறிப்பிடுகின்றனர்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கவனத்திற்கு கொண்டு சென்ற போதும் அவர்களால் கூட்டத்தில் கலந்துரையாடப்படுவதோடு நடவடிக்கை நின்றுவிடுகிறது. மாவட்ட எம்.பியிடம் முறையிட்டால் அவரும் திரும்பி பார்ப்பதாக இல்லை. பொலீஸ் உட்பட பாதுகாப்பு தரப்பினர்களிடம் முறையிட்டால் அவர்கள் மணல் அகழ்வோரிடம் எங்களை காட்டிக்கொடுக்கின்றனர். இந்த நிலையில் எங்களால் என்ன செய்வது என்றே தெரியவில்லை எனவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (அ)

# பல்கலை உதவி விரிவுரையாளர் லொறி மோதியதில் உயிரிழந்தார்!

கொழும்பு, பெப். 22

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தின் உதவி விரிவுரையாளரான 27 வயதான யுவதி பத்தரமுல்ல, விக்கிரம சிங்கபுரவில் லொறியில் மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

பத்தரமுல்லை விக்கிரம சிங்கபுர சந்தியில் பாதசாரி கடவைக்கு அருகில் வீதியைக் கடக்கும்போது லொறியில் அவர் மோதியுள்ளார்.

பத்தரமுல்லை, விக்கிரம சிங்கபுர, 10ஆவது லேனில் வசித்து வந்த லக்மினி போகமுவ என்ற 27 வயதுடைய விரிவுரையாளரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விக்கிரமசிங்கபுரவிலிருந்து வேலைக்குச் செல்வதற்காக பாதசாரி கடவைக்கு அருகில் வீதியின் மறுபுறம் சென்றபோது பத்தரமுல்லை பெலவத்தையிலிருந்து தலவத்துகொட நோக்கிச் சென்ற லொறியின் முன்பகுதியில் மோதி வீதியில் விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

2017ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் இரண்டு பதக்கங்களையும் புலமைப்பரிசில்களையும் பெற்று சிறந்த மாணவியாக தெரிவானவர் இவர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவியான லக்மினி சுலோத்தம போகமுவ நடனம், பாடுதல் மற்றும் இசைக்கருவிகளை வாசிப்பதில் திறமையானவர்.

கொழும்பு பல்கலைக்கழகம், பத்தரமுல்ல கலை பீடத்தின் சர்வதேச உறவுகள் பிரிவில் உதவி விரிவுரையாளராக கடமையாற்றிய அவர், களனி பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சந்திரசிறி போகமுவவின் ஒரே பிள்ளையாவார்.

(அ)

# சுமந்திரன் தாக்கல் செய்த மனுவை நிராகரியுங்கள்!

## உயர்நீதிமன்றத்தில் சட்டமா அதிபர்

கொழும்பு, பெப். 22

அண்மையில் நிறைவேற்றப்பட்ட இணையவழி பாதுகாப்புச் சட்டத்தை சபாநாயகர் அங்கீகரித்ததை எதிர்த்து பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை நிராகரிக்குமாறு சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் உயர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

உரிய நடைமுறையைப் பின்பற்றி பாராளுமன்றம் இந்தச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளதாகக் கூறிய சட்டமா அதிபர், மனு மீது ஐந்து பூர்வாங்க ஆட்சேபனைகளை எழுப்பி, அரசியலமைப்புச் சட்ட விதிகளுக்கு முரணாக இது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றார்.

மேலும், பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டமூலம், சபாநாயகரால் அங்கீகரிக்கப்பட்டு இருப்பது, அரசியலமைப்புச் சட்டத்தின் 126ஆவது பிரிவின் கீழ் பரிசீலிக்கப்படும் நிறைவேற்று அல்லது நிர்வாக நடவடிக்கை அல்ல என்பதால், இந்த மனுவை விசாரிக்க உயர் நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்றும் அவர் ஆட்சேபனை எழுப்பினார்.

மனுதாரர் பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதால், முறையாக நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டமன்ற நடைமுறைக்கு சவால் விடுத்து, நீதிமன்றத்தில் சவால் செய்ய முடியாத குற்றத்தைச் செய்துள்ளார் என்று சட்டமா அதிபர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தை ஒத்திவைக்கும் போது சபாநாயகரின் அதிகாரங்கள் செல்லுபடியாகும் என்றும் எனவே, சபாநாயகர் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டகாலத்தில் சட்டத்தை அங்கீகரிப்பதும் செல்லுபடியாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சம்பந்தப்பட்ட சட்டமூலத்தின் திருத்தங்கள் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்மானங்களுக்கு இணங்குவதற்கு பாராளுமன்றம் தவறிவிட்டதாகவும், எனவே பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட காலத்தில் சபாநாயகர் அதனை அங்கீகரிப்பது செல்லுபடியாகாது என்றும், ஒத்திவைக்கப்பட்ட காலத்தின் போது அது ஒரு சட்டமன்ற நடவடிக்கை அல்ல என்றும் மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ நீதிமன்றில் தெரிவித்தார். (அ)

# எழுச்சி பெறுகிறது தேசிய மக்கள் சக்தி

## பொன்சேகா சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 22

" கட்சிசாரா வாக்குகளில் (மிதக்கும் வாக்குகள்) 30 வீதம் தேசிய மக்கள் சக்திக்கு சென்றடைந்துள்ளது. இது பாரிய மாற்றமாகும்." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"ஜே.வி.பியில் முன்னர் ஐந்து லட்சம் பேர் இருந்தாலும் அக்கட்சியில் ஒழுக்க கட்டுப்பாடு இருந்தது. கூட்டங்களின் போதுகூட இராணுவக் கட்டமைப்புபோல ஒழுக்கம் பேணப்பட்டுவந்தது. ஆனால் ஜே.வி.பி. தற்போது தேசிய மக்கள் சக்தியாகியுள்ளது. அந்த கூட்டணியில் இணைபவர்கள் எல்லாம் முன்னைய ஜே.வி.பியினர் போல் செயற்படுவார்கள் எனக் கூறமுடியாது. மொட்டு கட்சியில் இருந்து விலகி, ஐக்கிய மக்கள் சக்திக்கு வருவதற்கு வெட்கப்பட்டவர்கள்கூட தேசிய மக்கள் சக்திக்குள் சென்றுள்ளனர்.

மிதக்கும் வாக்குகளில் 30 வீதம் அவர்களுக்கு (தேசிய மக்கள் சக்திக்கு) சென்றுள்ளது. இளைஞர்களின் வாக்குகளிலும் சிறு வீதம் சென்றுள்ளது. முன்னர் 5 லட்சம் என்றால் தற்போது 20 லட்சம். இது பாரிய மாற்றம் என்பதை ஏற்றுதான் ஆகவேண்டும். மறுபுறத்தில் அன்றைய ஜே.வி.பியில் இருந்த ஒழுக்கத்தை இன்று பேண முடியாது.

நாட்டை ஆள்வதென்பதும் நகைப்புக்குரிய காரணம் அல்ல. அதற்கு அனுபவம் இருக்க வேண்டும். அந்த இடத்துக்கு தேசிய மக்கள் சக்தி வந்துள்ளதா என்பது பிரச்னையாகும்." - என்றார்.(அ)

# பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதால் தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல்

## உதய கம்மன்பில சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 22

மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவது மிகவும் ஆபத்தானது என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதனால் நாட்டின் தேசியப் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தல்கள் ஏற்படக் கூடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் வடக்கு பொலிஸ் பிரிவிற்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையில் பிரிவினைவாத யுத்தம் ஏற்படும் சாத்தியம் உண்டு என அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கைக்கு எதிராக பிரிவினைவாதவாதிகளுக்கு ஆதரவளிக்கும் நாடுகள், நேரடியாக வட மாகாண பொலிஸாருக்கு உதவிகள் வழங்கக் கூடும்.

13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களில் மிகவும் ஆபத்தானது பொலிஸ் அதிகாரம்.

பொலிஸ் அதிகாரங்களை ரத்து செய்யும் நோக்கில் 22 ஆம் திருத்தச் சட்டம் என்ற திருத்தமொன்றை கொண்டு வந்தேன் - என்றார்.

(அ)

# புற்றுநோய் சிகிச்சை தொடர்பில் விளம்பரங்கள் மூலம் மோசடிகள்!

## வைத்தியர் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 22

புற்றுநோயை பூரணமாக குணப்படுத்துவதாக வெளியாகும் விளம்பரங்கள் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மஹரகம அபேக்ஷா புற்றுநோய் வைத்தியசாலையின் உளவியல் மருத்துவர் கே.வி.என் ரஞ்சன் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

புற்று நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது உறவினர்கள் பலர் மோசடிக்காரர்களிடம் சிக்குவதாக அவர் தெரிவித்துள்ளார்.

புற்றுநோயை பூரணமாக குணப்படுத்த முடியும் என சிலர் ஊடகங்களில் பணம் செலுத்தி விளம்பரம் செய்து மோசடி செய்வதாக அவர் எச்சரித்துள்ளார்.

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் சிறந்த மருத்துவ நிபுணர்கள் சேவை வழங்கி வருவதாகவும், தாதியர் உள்ளிட்ட ஏனைய மருத்துவ சேவைகளை வழங்குவோரும் சிறந்த முறையில் அர்ப்பணிப்புடன் சேவையை வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக புற்று நோயினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பெற்றோர் இவ்வாறான மோசடிகளில் சிக்கி விடுவதாக அவர் கூறியுள்ளார்.

அநேகமான புற்று நோய்கள் ஆரம்ப கட்டத்தில் கண்டறிந்து கொண்டால் பூரணமாக குணப்படுத்த முடியும் எனவும் விளக்கமளித்துள்ளார். (அ)

# 'கேக் லேடி' மீது முறைப்பாடு!

கொழும்பு, பெப். 22

களுத்துறை 'கேக் லேடி' என்ற பெண் சமூக வலைத்தளங்களில் பதிவிட்ட பதிவுகளினால் தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பொதுஜன பெரமுனவின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த பெண் தன்னையும், பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனையும் அவமதிக்கும் வகையில் சமூக ஊடகங்களில் பல்வேறு பதிவுகளை செய்துள்ளதாகவும், அந்தப் பதிவுகள் காரணமாக தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

அபேகுணவர்தன தவறு செய்திருந்தால் அவரை விமர்சித்தாலும் பரவாயில்லை, தவறு செய்யாமல் இவ்வாறு விமர்சிப்பது சரியல்ல எனவும், அந்த முகநூல் பதிவுகளில் அவர் ஒரு திருடன் என்றும், அவரை உடனடியாக கைது செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

(அ)

# கண்ணிவெடி அகற்றும் பணிகள் 2027 ஆம் ஆண்டு வரை நடக்கும்

## அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு

கொழும்பு, பெப். 22

**கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளை கண்காணித்து வழிநடத்தும் நோக்கத்திற்காக தேசிய கண்ணிவெடி நடவடிக்கை மையத்தை 2027 வரை பராமரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

இது தொடர்பான அமைச்சரவை பத்திரம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் கையொப்பத்துடன் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

2027ஆம் ஆண்டுக்குள் கண்ணிவெடிகள் இல்லாத நாட்டை உருவாக்குவதற்கு இலங்கை இணக்கம் தெரிவித்துள்ளதாகவும், அதன் பிரகாரம் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வரும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கண்ணிவெடி அகற்றும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்ட முகாமைத்துவ பிரிவு தேவையில்லை எனவும், 2027ஆம் ஆண்டு வரை வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டுமாயின், வருடாந்தம் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் எனவும் அமைச்சரவை தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வர்த்தகர்கள் இருவர் கைது

கொழும்பு, பெப். 22

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இரண்டு வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அனைத்து சோதனைகளையும் தவிர்த்து தீர்வை வரி செலுத்தாமல் 43 லட்சத்து 42 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளை எடுத்துச் சென்ற இருவரே விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் நிலைய அதிகாரிக்கு கிடைத்த தகவலுக்கு அமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இரு வர்த்தகர்கள் கொழும்பு பொரளையில் வசிக்கும் 29 மற்றும் 25 வயதுடையவர்கள். இவர்கள் அடிக்கடி விமான பயணங்களில் ஈடுபட்டு வெளிநாட்டு பொருட்களை இலங்கைக்கு கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர்.

இவர்கள் நேற்று முன் தினம் பிற்பகல் இந்தியாவின் சென்னையில் இருந்து விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

அவர்களின் பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 33,400 சிகரெட்டுகளை பொலிஸார் கண்டுபிடித்து கைது செய்தனர்.

(அ)

# உண்மை, நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலத்திற்கு மல்வத்து, அஸ்கிரிய பீ மகா சங்கத்தினர் பாராட்டு

கொழும்பு, பெப். 22

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலத்திற்கு மல்வத்து, அஸ்கிரிய பீட மகா சங்கத்தினர் தமது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்.

உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்கால செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அசங்க குணவன்ச உள்ளிட்ட அதிகாரிகள், உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலத்தின் பிரதியொன்றை கடந்த 19 ஆம் திகதி மல்வத்து அஸ்கிரி மகா மகாநாயக்க தேரர்களிடம் கையளித்தனர்.

இச்சட்டமூலத்திற்குப் பாராட்டு தெரிவித்த மல்வத்து பீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரிய தரப்பு மகாநாயக்கர் வரக்காகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் ஆகியோர் இதனை மேலும் பரிசீலனை செய்து பொது நிலைப்பாட்டை அறிவிக்கவும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

(அ)

# பாதணி வவுச்சரை விற்று மதுபானம் அருந்திய தந்தை

கொழும்பு, பெப். 22

அம்பாந்தோட்டை மாவட்டம், திஸ்ஸமஹாராம பகுதியில் பாடசாலையில் பிள்ளைக்கு பாதணிகளுக்காக வழங்கப்பட்ட வவுச்சரை விற்று தந்தை ஒருவர் மதுபானம் அருந்திய சம்பவம் பதிவாகியுள்ளது.

பாடசாலையில் பாதணிகளுக்கு வவுச்சர் வழங்கப்பட்ட போதிலும், பாதணியின்றி பாடசாலைக்கு வரும் மாணவர்களை அழைத்து ஆசிரியர்கள் நடத்திய விசாரணையின் போது குறித்த விடயம் தெரியவந்துள்ளது.

மேலும் பல பெற்றோர்கள் பாதணி வவுச்சரை விற்று உருளைக்கிழங்கு, பருப்பு போன்ற பொருட்களை கொள்வனவு செய்துள்ளமையும் இதன்போது தெரியவந்துள்ளது. (அ)



# மோட்டார் சைக்கிள் தீ வைப்பு

யாழ்ப்பாணம், பெப். 22

காரைநகர் பகுதியில் வாள்வெட்டு வன்முறை கும்பலொன்று மோட்டார் வாகனமொன்றைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

காரைநகர் ஆலடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு குறித்த சம்பவம் இடம்பெற்றுள் ளது.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் மயங்கி விழுந்த ஆசிரியர் மரணம்!

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மயங்கி விழுந்த ஆசிரியர் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் ,கோண்டாவில் பகுதியை சேர்ந்த ஞான சம்பந்தர் மில்ரன் என்ற 32 வயதான ஆசிரியரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தீடீரென மயங்கி விழுந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# தேசிய மக்கள் சக்தியின் பதிவு; உயர் நீதிமன்றம் அழைப்பாணை

கொழும்பு, பெப். 22

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தேசிய மக்கள் சக்தி பதிவு செய்யப்பட்ட விதம் சட்ட விரோதமானது என கோரி சட்டத்தரணி நாகாநந்த கொடித்துவக்கு தாக்கல் செய்த மனுவின் உண்மைகளை சரி பார்க்க மார்ச் 04 ஆம் திகதி அழைப்பாணையை அனுப்ப உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

அதன்படி பிரேத்தி பத்மன் சூரசேன, அச்சல வென்னப்பு மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் ஓர் அங்கமான தேசிய மக்கள் சக்தி அரசியல் கட்சியாகப் பதிவு செய்திருப்பது சட்டத்திற்கு முற்றிலும் எதிரானது என நாகாநந்த கொடிதுவாக்கு மனுவில் தெரிவித்துள்ளார்.

மேலும் அரசியலமைப்பின் 103(2) பிரிவின்படி, ஒரே கட்சியின் வெவ்வேறு கிளைகளை அரசியல் கட்சிகளாகப் பதிவு செய்வது தேர்தல் சட்டங்களுக்கு முரணானது மற்றும் அதன் மூலம் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்கு அரசியலமைப்பு உத்தரவாதம் அளித்துள்ள உரிமையை மீறும் மற்றும் முற்றிலும் சட்டத்திற்கு எதிரானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# நயினாதீவு மக்களின் குறைகளை கேட்டறிந்த வடமாகாண ஆளுநர்



யாழ்ப்பாணம், பெப். 22

உள்ளூராட்சி திணைக்களத்தின் ஏற்பாட்டில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் மற்றும் தேவைகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் நயினாதீவு அமுதசுரபி மண்டபத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் உள்ளூராட்சி திணைக்கள ஆணையாளர் எஸ். பிரணவநாதன் மற்றும் அதிகாரிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

நயினாதீவில் சுமார் ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த ஐயாயிரம் பேர் வரை வசிக்கின்றனர்.

மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய நயினாதீவு மக்களின் பிரதான ஜீவனோபாயமாக கடற்தொழில் காணப்படுகிறது.

நயினாதீவில் உள்ள பாடசாலைகளின் குறைபாடுகள் மற்றும் மாணவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்து கலந்துரையாடலின்போது கிராம மக்களால் எடுத்துக் கூறப்பட்டது.

இதன்போது பாடசாலைகளுக்கான தேவைகளை உடனடியாக நிவர்த்தி செய்ய, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு, ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

இதேவேளை போக்குவரத்து, குடிநீர் வசதி உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்கும் தீர்வு காண்பதற்கான திட்டவரைபை சமர்ப்பிக்குமாறும், நயினாதீவை பிளாஸ்ரிக் அற்ற முன்மாதிரி கிராமமாக மாற்ற நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநர் குறிப்பிட்டார்.

தீவக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ள துடன், புலம்பெயர் அமைப்புகளும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும் ஆளுநர் சுட்டிக் காட்டினார்.

இயற்கை வளங்களை பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான சாத்தியப்பாடுகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

மக்களுடனான கலந்துரையாடலின் பின்னர் நயினாதீவு அமுதசுரபி அன்னதான மண்டப நிர்வாகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட மதிய உணவிலும் ஆளுநர் உள்ளிட்ட குழுவினர் கலத்துகொண்டனர்.

இதேவேளை தீவிலுள்ள மத வழிபாட்டுத் தலங்களுக்கு சென்று மதத்தலைவர்களுடனும் ஆளுநர் கலந்துரையாடினார்.

(அ)

# பொய்கள், பித்தலாட்டம் பேசும் மலையக அமைச்சர்

## சாடுகின்றார் மனோ கணேசன்

கொழும்பு, பெப். 22

**“பொய், பித்தலாட்டம் பேசுகின்ற மலையக அமைச்சரின் நடத்தை கண்டு, எனது நண்பன் ஆறுமுகன் தொண்டமானின் ஆன்மாதான் அழுகின்றது. அதுதான் உண்மை.”**

**-இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய மனோ கணேசன் இது தொடர்பில் கூறியதாவது,

“இந்த சபையில் நான் நேற்று இல்லாதபோது ஒரு மலையக அமைச்சர் என்னை பற்றி பொய், பித்தலாட்டம் நிறைந்த உரையை ஆற்றிவிட்டு சென்று விட்டார். அவருக்கு பதில் சொல்வது எனக்கு இழுக்கு என நினைக்கின்றேன். இருந்தாலும்கூட நாட்டுக்கும், சமூகத்துக்கும் உண்மை தெரிய வரவேண்டும் என்பதற்காக ஒன்றை கூற விரும்புகின்றேன்.

2017 இல் எமது அரசாங்கத்தின் காலத்தில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் நாங்கள் கேட்டு பெற்றுக்கொண்ட 10 ஆயிரம் பெருந்தோட்ட வீடுகளுக்கான உறுதிமொழி ஐந்து வருடங்களுக்கு பிறகு நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

10 ஆயிரம் இந்திய வீட்டுத் திட்டத்தை வாழ்த்தி வரவேற்கின்றோம் என்றே நான் கூறி இருந்தேன். இப்படி இருந்தும் மனோ கணேசன் கூறுவதைக் கேட்டு பிள்ளையாரே அழுவார் என அந்த அமைச்சர் கூறுகின்றார். பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி பொய்யுரைக்கின்றார். பேசி, பேசியே கொல்கின்றார். பேசுவதைத் தவிர வேறு எதையும் செய்யவில்லை.

பிள்ளையார் அழமாட்டார், பிள்ளையார் என்றால் யார் கணேசன், அந்த பெரிய பிள்ளையார் கூறுவதைத்தான் இந்த சின்ன பிள்ளையார் செய்கின்றார் என்று பிள்ளையார் மகிழ்ச்சியடைகின்றார். இதுவே உண்மை - என்றார். (அ)

# மன்னாரில் இருவர் சுட்டுக்கொலை; சந்தேக நபர்கள் இரண்டு பேர் கைது

மன்னார், பெப். 22

மன்னார் - அடம்பன், முள்ளிக்கண்டல் பகுதியில் இருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிலங்குளம் மற்றும் மன்னார் பகுதிகளைச் சேர்ந்த 33 மற்றும் 55 வயதை உடைய குறித்த இருவரும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் 24 ஆம் திகதி இந்த இரட்டை கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வயலுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக மோட்டார் சைக்கிளில் பயணித்து கொண்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டு இருந்தது.

குறித்த துப்பாக்கிச் சூட்டில் மன்னார் நொச்சிக்குளம் பகுதியைச் சேர்ந்த ஜேசுதாசன் அருந்தவராஜா (வயது-42) மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஈச்சளவக்கை கிராமத்தை சேர்ந்த கணபதி காளிமுத்து (வயது-56) ஆகியோரே உயிரிழந்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

# பாம்பு தீண்டியதில் கர்ப்பிணி மரணம்!

திருமலை, பெப். 22

திருகோணமலை - மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பாம்பு கடிக்கு இலக்காகி 3 மாத கர்ப்பிணித் தாயொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவமானது நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில், திருகோணமலை மொரவெவ ஆறாம் வாய்க்கால் பகுதியைச் சேர்ந்த இமேஷா குமாரி (வயது 23) என்ற மூன்று மாத கர்ப்பிணித் தாயொருவர் மாடு கட்டுவதற்காக சென்ற போது பாம்புக்கடிக்கு இலக்காகியுள்ளார்.

இதில் பாதிக்கப்பட்ட கர்ப்பிணியை மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும், உயிரிழந்துள்ளார். சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# சீனக் கப்பல்கள் இலங்கைக்கு!

கொழும்பு, பெப். 22

சீன சுற்றுலாப் பயணிகளுடன் 50 சொகுசு பயணிகள் கப்பல்கள் பெப்ரவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை இலங்கைக்கு வருகை தரவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன்படி சில கப்பல்கள் கொழும்பு துறைமுகத்திலும், மேலும் சில கப்பல்கள் அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை துறைமுகங்களில் நங்கூரமிடவுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை, இவ்வருடம் பெப்ரவரி 16ஆம் திகதி வரை இலங்கைக்கு வந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 350,000ஐத் தாண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பற்பசை, சவர்க்காரம் உள்ளிட்ட பொருட்களில் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் இராசாயனங்கள்?

கொழும்பு, பெப். 22

சந்தையில் விற்பனைக்குக் கிடைக்கும் பல்வேறு வகையான சவர்க்காரம், கிருமி நாசினிகள், சலவை தூள், நீரை உட்புகவிடாத துணிகள் போன்றவற்றில் உடலின் ஹார்மோன்களுக்கு மிகவும் தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் இருப்பதாக சுற்றுச் சூழல் நீதி மையம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

கூடுதலாக, சில ரெயின் கோட்டுகள் மற்றும் ஏப்ரன்களில் மனித ஹார்மோன்களின் செயல்பாட்டை மோசமாக பாதிக்கும் இரசாயனங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ரசாயனங்களால் சிறுநீரக புற்றுநோய், டெஸ்டிகுலர் புற்றுநோய், தைராய்ட் நோய், கர்ப்ப கால உயர் ரத்த அழுத்தம், ரத்தம் மற்றும் தாய்ப்பாலின் மூலம் தாயிடமிருந்து குழந்தைக்கு இந்த ரசாயனங்கள் பரவ வாய்ப்புள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

பாலிபுளோரோஅல்கைல், மீதில்பரபின், பாபில்பரபின், ஐசோபிரைல்பரபின், பியூட்டில்பரபின், ஐபென்டைல்பரபின் போன்ற பல்வேறு இரசாயனங்கள் இந்த ஆராய்ச்சிகளில் கண்டறியப்பட்டுள்ளன.

குறிப்பாக பாலிபுளோரோ அல்கைல் பொருட்கள் நீரில் கரையக்கூடியவை, எனவே அவை தண்ணீரின் மூலம் மனிதர்கள் மற்றும் நீர்வாழ் உயிரினங்களின் உடலுக்குள் நுழைகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

சுற்றுச்சூழல் நீதி மையம் மற்றும் சர்வதேச மாசு ஒழிப்பு வலையமைப்பு இணைந்து நடத்திய ஆய்வில் இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.

செக் குடியரசில் உள்ள சார்லஸ் பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் ஆய்வுத் துறைக்கு ஃபெரிக் துணியால் செய்யப்பட்ட ஏப்ரன்கள், ரெயின் கோட்கள் போன்றவற்றின் ஆறு மாதிரிகளை அனுப்பியதில், ஒரு ஏப்ரனில் ஒரு நானோகிராமிற்கு 2.7 கிராம் என்ற ரசாயனம் பஃப்ளுரோரோடெகானோயிக் அமிலமும், ஒரு ரெயின்கோட்டில் ஒரு நானோகிராமுக்கு 2.6 கிராம் இரசாயனம் இருப்பதும் தெரிய வந்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்படும் ஆடைகளில் இந்த இரசாயனங்கள் அதிகம் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெத்தில்பாரபின், எத்தில்பரபின், புரோபில்பரபின், ஐசோபிரைல்பரபின், ப்யூட்டில்பரபின், பென்டைல்பரபின், ஃபைனில்பாரபின், பென்சில்பரபின், கை சுத்திகரிப்பு, பற்பசை, பாடி வாஷ், மவுத்வாஷ், கிருமிநாசினி டிஷ்யூ பேப்பர் உட்பட 30 மாதிரிகள் அவற்றில் அடங்கியுள்ளன.

சுற்றாடல் நீதி நிலையத்தின் திட்ட முகாமைத்துவ அதிகாரி சலானி ரூபசிங்க கூறுகையில், பரபென் அடங்கிய உணவுகள், மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்களின் பாவனையானது உடலின் ஹார்மோன்களைப் பாதித்து புற்றுநோய், கருப் பிரச்னைகள், இனப்பெருக்கக் கோளாறுகள் போன்றவற்றை ஏற் டுத்துகிறது என குறிப்பிட்டுள்ளார்.

# சமூக ஊடகங்களை கட்டுப்படுத்தும் தேவை அரசாங்கத்திற்கு கிடையாது

கொழும்பு, பெப். 22

சமூக ஊடகங்களை கட்டுப்படுத்துவதற்கான எந்த தேவையும் அரசாங்கத்திற்கு இல்லை என்று வெகுஜன ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இனக்குழுக்களுக்கு இடையிலான முரண்பாடுகள், மதங்களுக்கு இடையிலான முரண்



பாடுகள், மக்கள் தமது பிள்ளைகளையும் குடும்பங்களையும் இழக்கச் செய்யும் பொய்யான மற்றும் பிழையான பிரசாரங்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள் போன்றவற்றை தடுக்க அரசாங்கம் விரும்புவதாகவும், அவற்றை தடுப்பதே சமூக ஊடக செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் சட்டத்தின் நோக்கம்.

மக்கள் தாம் விரும்பும் எந்தவொரு விடயத்தையும் தங்கள் பெயரில் சுதந்திரமாக முன்வைக்க இந்த சட்டத்தில் எந்த தடையும் இல்லை.

நாட்டில் எமது பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படுகின்ற சட்டதிட்டங்கள் தொடர்பான உரிமை சட்டத்தை உருவாக்கும் இலங்கை பாராளுமன்றத்திற்கே உண்டு என்றும் அதற்கு தேவையான சட்டமூலம் கடந்த வாரம் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது.

அந்த திருத்தங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டால் 14 நாட்களுக்குள் எவரும் நீதிமன்றத்திற்கு செல்ல முடியும் - என்றார். (அ)



# கடற்படை புதிய பணிக்குழாம் பிரதானியாக ரியர் அட்மிரல் பிரதீப் ரத்நாயக்க நியமனம்

கொழும்பு,பெப். 22

இலங்கை கடற்படையின் புதிய பணிக்குழாம் பிரதானியாக ரியர் அட்மிரல் பிரதீப் ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ரியர் அட்மிரல் பிரதீப் ரத்நாயக்க, மாத்தளை சென். தோமஸ் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார்.

அவர் 1987 இல் இலங்கை கடற்படையின் நிறைவேற்றுப் பிரிவில் கெடட் அதிகாரியாக இணைந்தார். (அ)

# அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையின் மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு விஜயம்!



அம்பாறை, பெப். 22

பல்கலைக்கழக அறிவுசார் வளங்களை சூழவுள்ள மாணவர்களும் தங்களது அறிவுவிருத்திக்கும் வலுவூட்டலுக்கும் பயன்படுத்த அனுமதிக்கும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உயரிய சிந்தனையின் கீழ் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அனுமதியுடன் அட்டாளைச்சேனை தேசிய பாடாசலையில் உயர்தரத்தில் கல்விகற்கும் மாணவர்கள் கலை கலாச்சார பீடம் மற்றும் அஷ்ரப் ஞாபகார்த்த நூலகம் உள்ளிட்ட பல்வறு இடங்களை பார்வையிட்டதுடன் கலை கலாசார பீடத்தில் இடம்பெற்ற அறிவுசார் செயலமர்விலும் கலந்துகொண்டனர்.

கலை கலாசார பீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற அறிவுசார் செயலமர்வில் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் பிரதான பேச்சாளராக கலந்துகொண்டு உரையாற்றினார்.

இந்நிகழ்வின்போது கலை கலாச்சார பீட சமூகவியல் துறையின் துறைத்தலைவர் பேராசிரியர் எஸ்.எம்.ஐயூப் மாணவர்களின் உளவள விருத்தியோடு சம்பந்தப்பட்ட உரையை ஆற்றினார்.

மாணவர்களுடன் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையின் உதவி அதிபர் எம்.ஜெ.எம். அன்வர் நௌஷாட் , உதவி அதிபர் ஏ.ஆர்.எம். ஆஷிக், பகுதித்தலைவர் ஏ.எம். ஜெஸீல் மற்றும் ஆசிரியர், ஆசிரியைகளான எம். நியாஸ், ஏ.எம். சித்தீக், எம்.ஏ.சி.எம். றவூப், எம். றிஸ்லி, ஏ.சி. நிலுபா, எஸ். றுமானா மற்றும் ஏ.ஏ. நாதியா ஆகியோரும் இணைந்திருந்தனர். (அ)



# வேலைவாய்ப்புகள் இல்லாமல் சிரமப்படும் இளைஞர்களுடன் ஆளுநர் கலந்துரையாடல்

திருமலை, பெப். 22

இந்தியாவில் பட்டப் படிப்பை முடித்துவிட்டு நாடு திரும்பி வேலைவாய்ப்புகள் இல்லாது சிரமப்படும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்க கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இந்தியாவில் பட்டப் படிப்பை முடித்துள்ள இவர்கள் அரசாங்க வேலை கிடைப்பதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவர்களது ஆவணங்களை ஒவர் அமைப்பின் உதவியுடன் ஒழுங்குபடுத்த ஆலோசனைகளை ஆளுநர் வழங்கியுள்ளதுடன், திருப்பி அனுப்பப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில் தலா 50000ரூபா ஒதுக்கீடு செய்யவும் ஏற்பாடு செய்துள்ளார். (அ)

# அம்பாறையில் கிழக்கு மாகாண ஆளுநரால் இலவச பாடநூல், சீருடை துணிகள் வழங்கல்



அம்பாறை, பெப். 22

2024 ஆம் ஆண்டுக்கான அம்பாறை மாவட்ட பாடசாலைகளுக்கான இலவச பாடநூல் மற்றும் சீருடை விநியோக நிகழ்வு அம்பாறையிலுள்ள மூன்று பாடசாலைகளில் இடம்பெற்றது.

அம்பாறை வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மேற்படி நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கான இலவச பாடநூல் மற்றும் சீருடை துணிகளையும் வழங்கி வைத்தார்.

அம்பாறை காமினி வித்தியாலயம்,அம்பாறை சத்தாதிஸ்ஸ மகா வித்தியாலயம் மற்றும் பண்டாரநாயக தேசிய கல்லூரி ஆகிய பாடசாலைகளில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் கோட்ட கல்வி பணிப்பாளர்கள், கல்வி அதிகாரிகள்,பாடசாலை அதிபர்கள் ,ஆசிரியர்கள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)



# பொருளாதார ரீதியாக சிரமப்படும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்

அம்பாறை, பெப். 22

சாய்ந்தமருது கேட் முதலியார் எம்.எஸ்.காரியப்பர் வித்யாலயத்தில் பாடசாலை அதிபர் ஆரிப் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஏ.ஆர்.மன்சூர் பவுண்டேஷனின் ஸ்தாபக தலைவி சட்டத்தரணி மர்யம் மன்சூர் நளிமுதீனினால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் டாக்டர் எஸ்.நளிமுதீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சட்டத்தரணி மர்யம் மன்சூர் நளிமுதீன் அவர்கள் முன்னாள் அமைச்சர் மர்ஹூம் .ஏ.ஆர்.மன்சூர் அவர்களின் புதல்வியும் , முன்னாள் அமைச்சர் மர்ஹூம் கேட்முதலியார் எம்.எஸ்.காரியப்பர் அவர்களின் பேத்தியுமாவார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (அ)

# அட்டாளைச்சேனையில் சாதனைப் பெருவிழா

மட்டக்களப்பு, பெப். 22

அட்டாளைச்சேனை ரீ.பி. ஜாயா வித்தியாலயத்தில் கடந்த 2023 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் அண்மையில் நடைபெற்றது.




திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தேசிய காங்கிரஸின் தேசிய தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோரும் கலந்து கொண்டனர். (அ)



10 ஆவது தேசிய சாரணர் ஜம்போரி ஆரம்ப நிகழ்வுக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ககிவை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திருக்கோணமலை கடற்படை தளத்தில் வைத்து வரவேற்றார். (அ)



# காஸாவில் நடப்பது இனப் படுகொலை

## பிரேசில் ஜனாதிபதி குற்றச்சாட்டு

பிரேசிலியா, பெப். 22

**பலஸ்தீனத்தில் வாழும் மக்களுக்கு எதிராக இஸ்ரேல் இனப்படுகொலைகளை மேற்கொண்டு வருவதாக பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா டி சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.**

யூதர்களை அழிக்க ஜேர்மனிய சர்வாதிகாரி அடோல்வ் ஹிட்லர் மேற்கொண்ட பிரசாரத்திற்கு இணையாக இஸ்ரேலின் நடவடிக்கைகள் அமைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

எத்தியோப்பியாவின் தலைநகர் அடிஸ் அபாபாவில் ஆபிரிக்க ஒன்றிய உச்ச மாநாட்டில் கலந்துக்கொள்ள சென்றிருந்த போதே லூலா டி சில்வா இஸ்ரேலுக்கு எதிரான இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

பலஸ்தீனத்தின் காஸாவில் நடந்து வரும் மோதல் ஒரு படைக்கு எதிராக மற்றொரு படை நடத்தும் போர் அல்ல.

இது தாக்க துடித்துக் கொண்டிருக்கும் இராணுவம் ஒன்றுக்கும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு இடையிலான போர்.

காஸாவில் உள்ள பலஸ்தீன மக்களுக்கு எதிராக நடக்கும் சம்பவங்கள் போன்ற சம்பவங்கள் வரலாற்றில் வேறு எங்கேயும் இதுவரை நடந்ததில்லை.

இருப்பினும், ஒரே ஒரு முறை, யூதர்களைக் கொலை ஹிட்லர் முடிவு செய்த போது இதேபோன்ற சம்பவங்கள் நடந்தன எனவும் பிரேசில் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்

அதேவேளை பிரேசில் ஜனாதிபதியின் கருத்துக்கள் வெட்கக்கேடானவை மற்றும் கடுமையானவை என இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாஹூ விமர்சித்துள்ளார்.

இதனை கண்டிக்கும் வகையில் பிரேசிலுக்கான தமது தூதுவரை திரும்ப அழைத்துள்ளதாகவும் நெத்தன்யாஹூ கூறியுள்ளார்.

இந்த நிலையில், பிரேசில் ஜனாதிபதியின் கருத்துகள் தமது கட்டுப்பாட்டில் உள்ள காஸா மக்கள் அனுபவித்து வரும் துயரத்தை அப்படியே படம்பிடித்துக் காட்டுவதாக ஹமாஸ் அமைப்பு கூறியுள்ளது. (அ)

# ஆபிரிக்க நாடுகளில் தளங்களை அமைத்து வரும் ஐ.எஸ்.ஐ.எஸ்!

## வெளிநாடுகள் மீது தாக்குதல் நடத்த திட்டம்

நியூயோர்க், பெப். 22

இஸ்லாமிய அரசு என்ற ஐ.எஸ்.ஐ.எஸ் இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்பு, ஈராக் மற்றும் சிரியாவுக்கு அடுத்ததாக ஆபிரிக்காவில் தற்போது புதிய தளங்களை நிறுவி வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக மோதல்கள் காரணமாக பதற்றத்தில் இருந்து வரும் மேற்கு ஆப்பிரிக்க நாடுகளை ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு தனக்கு ஏற்ற இடமாக மாறி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வறுமை மற்றும் உணவுப் பற்றாகுறை காரணமாக ஏற்பட்டுள்ள பட்னி மற்றும் உள்நாட்டுப் போர்கள் காரணமாக மேற்கு ஆப்பிரிக்க நாடுகள் போராடி வருகின்றன.

நைஜர், மாலி மற்றும் புர்கினா பாசோ போன்ற மேற்கு ஆப்பிரிக்க நாடுகள் மோசமான சூழ்நிலையை எதிர்நோக்கி வருகின்றன.



இந்த நிலைமைகளை பயன்படுத்தி ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் அடிப்படைவாத தீவிரவாதிகள் அந்த நாடுகளில் தமது தளங்களை அமைத்து வருகின்றனர்.

மேற்கு ஆபிரிக்காவில் நிலவும் அரசியல் நிலையற்ற தன்மையுடன்,ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் தளங்களும் அந்த நாடுகளுக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை கவலை தெரிவித்துள்ளது.

அத்துடன் ஐ.எஸ்.ஐ.எஸ்., வெளிநாடுகள் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளமை குறித்து புலனாய்வு அமைப்புகளிடம் இருந்து தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் அந்த அமைப்பின் தீவிரவாதிகள் ஆபிரிக்க நாடுகளை புதிய தளமாக அமைத்து வருவதாகவும் ஐக்கிய நாடுகள் அமைப்பு கூறியுள்ளது. (அ)

# கணவரின் மரணத்தில் புடினுக்கு முழு தொடர்பு

## சுதந்திர ரஷ்யாவுக்காக போராட நவல்னியின் மனைவி சபதம்



மொஸ்கோ, பெப். 22

மறைந்த ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னியின் மனைவி யூலியா நவல்னயா, தனது கணவரின் மரணத்தில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சாட்டினார்.

கடந்த திங்களன்று வெளியிட்ட ஒரு காணொளி செய்தியில் அவர், தனது பணியைத் தொடரவும், சுதந்திர ரஷ்யாவுக்காகப் போராடவும் சபதம் மேற்கொண்டார்.

மூன்று நாட்களுக்கு முன்பு புடின் அலெக்ஸியை ஏன் கொன்றார் என்பது எங்களுக்குத் தெரியும், அதைப் பற்றி விரைவில் உங்களுக்குச் சொல்வோம்.

அலெக்ஸிக்காகவும் நமக்காகவும் நாம் செய்யக்கூடிய முக்கிய விஷயம் என்னவென்றால், தொடர்ந்து போராடுவதுதான். நான் அலெக்ஸி நவல்னியின் பணியைத் தொடர்வேன், நம் நாட்டிற்காக தொடர்ந்து போராடுவேன்.

ரஷ்ய அதிகாரிகள் நவல்னியின் மரணத்திற்கான காரணத்தை மறைக்கும் முயற்சியில் அவரது உடலை மறைத்து வைத்துள்ளனர் - என்றார்.

நீண்டகால ரஷ்ய எதிர்க்கட்சி அரசியல்வாதியும், கிரெம்ளின் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் விமர்சகருமான நவல்னி கடந்த வெள்ளிக்கிழமை தனது 47 வயதில் சிறையில் உயிரிழந்ததாக அரச சிறைத்துறை தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும், நவல்னியின் மரணத்தைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக ரஷ்யா கூறியுள்ளது. (அ)

# பிரித்தானியாவில் வீடு ஒன்றில் இருந்து சடலங்களாக மீட்கப்பட்ட குழந்தைகள்

லண்டன், பெப். 22

பிரித்தானியாவின் - பிரிஸ்டல் பகுதியில் உள்ள குடியிருப்பு ஒன்றில் இருந்து கத்திக் குத்து காயங்களுடன் உயிரிழந்த நிலையில் மூன்று சிறுவர்களின் சடலங்களை ஞாயிற்றுக் கிழமை இரவு பொலிஸார் மீட்டுள்ளனர்.

ஏழு வயது, மூன்று வயது மற்றும் ஒன்பது மாத குழந்தைகளே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் 42 வயதான பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரும் உயிருக்கு ஆபத்தான நிலையில் பொலிஸ் பாதுகாப்பில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பிரித்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குழந்தைகளின் மரணத்திற்கான காரணத்தை கண்டறிய பிரேத பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் எனவும் இந்த வார இறுதிக்குள் அந்த நடவடிக்கைகள் முடிக்கப்படும் எனவும் விசாரணை அதிகாரிகள் கூறியுள்ளனர்.



பொலிஸார் இதை ஒரு தனிமைப்படுத்தப்பட்ட சம்பவமாக கருதுவதுடன், சமூகத்திற்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை எனவும் கூறியுள்ளனர்.

"இதுபோன்ற இளம் குழந்தைகளின் மரணம் முழு சமூகத்திற்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது,

இந்த சம்பவம் காவல்துறையில் உள்ள அனைவருக்கும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது" என்று விசாரணை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

எவ்வாறாயினும், உயிரிழந்தவர்கள் சூடானிய சமூகத்தை சேர்ந்தவர்கள் என கூறப்படுகின்றது.

"பிரிஸ்டலில் மட்டுமல்ல, இங்கிலாந்து முழுவதும் உள்ள சூடானிய சமூகமும் இதனால் அதிர்ச்சியடைந்துள்ளது." என விசாரணை அதிகாரி சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

# ஹெய்ட்டியில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 16 பேர் சடலங்களாக மீட்பு

## மரணத்தில் நீடிக்கும் மர்மங்கள்

போர்ட்-ஓ-பிரின்ஸ், பெப். 22

தெற்கு ஹெய்ட்டியில் உள்ள ஒரு தொலைதூர மலை நகரத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 16 பேர் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக உள்ளூர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் குடும்பத்தினர் இறுதிச் சடங்கு ஒன்றில் கலந்து கொண்ட ஒரு நாளுக்குப் பின்னர் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

தலைநகர் போர்ட்-ஓ-பிரின்ஸுக்கு தெற்கே சுமார் 30 மைல் (48 கிமீ) தொலைவில் உள்ள செகுயின் நகரில் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

மரணத்திற்கு காரணம் என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை, ஆனால் விஷம் கலந்தமையால் இந்த மரணங்கள் பதிவாகியிருக்கலாம் என உள்ளூர் சாட்சிகள் ரொய்ட்டர்ஸிடம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், பொலிஸ் மற்றும் சுகாதார சேவைகள் அப்பகுதிக்கு விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மரணங்கள் கும்பலுடன் இணைக்கப்படவில்லை என்றாலும், ஹைட்டிய குற்றவியல் குழுக்கள் பெருகிய முறையில் சக்திவாய்ந்ததாக வளர்ந்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையின்படி, கடந்த ஆண்டு கும்பல் நடவடிக்கைகள் காரணமாக சுமார் 5,000 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# காஸா எல்லை பகுதியில் போர் நிறுத்தம் அவசியம்!

## ஈரான் வெளிவிவகார அமைச்சரிடம் எடுத்துரைத்தார் ஜனாதிபதி ரணில்



கொழும்பு, பெப். 22

**உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகைத் தந்திருக்கும் ஈரான் வெளிவிவகார அமைச்சர் ஹூசைன் அமீர் - அப்துல்லாஹியன் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.**

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, காஸா எல்லைப் பகுதிகளில் போர் நிறுத்தத்தை அமுல்படுத்தி சமாதான ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள ண்ள வேண்டியதன் அவசியத்தை ஈரான் வெளிவிவகார அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

அந்த சமாதான ஒப்பந்தம் ஒருதலைபட்சமாக இருக்ககூடாதெனவும் இரு தரப்பும் ஏற்றுக்கொள்ள கூடிய வகையில் ஏற்படுத்திகொள்ளப்பட வேண்டும் என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மேலும், இஸ்ரேல் அரசாங்கத்தின் பாதுகாகப்பை உறுதிப்படுத்தி, ஐந்து வருடங்களுக்குள் பாலஸ்தீன அரசாங்கத்தை அமைக்க வேண்டியது அவசியமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இந்து சமுத்திரத்திற்குள் பெர்சிய வளைகுடா நாடுகளுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, வலயத்தின் கப்பல் போக்குவரத்துச் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு இலங்கை அர்ப்பணிக்கும் என்றும் தெரிவித்தார்.

இதன்போது இருநாடுகளுக்கும் இடையிலான கலாசார தொடர்புகளை பலப்படுத்திக் கொள்வதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஈரான் வெளிவிவகார அமைச்சர் ஹூசைன் அமீர் - அப்துல்லாஹியன், இலங்கையின் சுற்றுலா வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காக ஈரான் அர்பணிப்புடன் செயற்படுமெனவும் உறுதியளித்தார்.

ஈரான் - இலங்கை பொருளாதார ஒத்துழைப்புகளின் புதிய அத்தியாயத்தை திறக்கும் வகையிலான செயற்பாடுகளை இலங்கை முன்னெடுத்து வருவதாகவும் ஜனாதிபதி ரணில் இதன்போது தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமக் ஏக்கநாயக்க மற்றும் சர்வதேச அலுவல்கள் தொடர் பான ஜனாதிபதியின் பணிப் பாளர் தினுக் கொலம்பகே உள்ளிட்டவர்களும் இதன் போது கலந்துகொண்டனர். (அ)

# வங்கிக் கடன் செலுத்தல் 13 வீதத்தால் குறைவடைவு

கொழும்பு, பெப். 22

வாடிக்கையாளர்கள் வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட கடன்களை மீள் செலுத்தும் வீதம் 13 சதவீதத்தால் குறைவடைந்துள்ளன. நிதி நிலைமை தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களை மறுசீரமைப்பதால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து மத்திய வங்கி விசேட கவனம் செலுத்தியுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம் பெற்ற அமர்வின் போது சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் எதிர்க்கொண்டுள்ள பிரச்சினைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எதிரணியின் உறுப்பினர்கள் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் ஒரு தரப்பினர் எதிர் கொண்டுள்ள நெருக்கடிகள் குறித்து மாத்திரம் விசேட கவனம் செலுத்த முடியாது. ஒட்டு மொத்த மக்களின் நலனையும் கருத்திற் கொண்டு தான் நிதி நிலைமை குறித்து முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

நாட்டின் வங்கிக் கட்டமைப்பை பாதுகாத்துக் கொள்வது அத்தியாவசியமானது. வாடிக்கையாளர்கள் வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட வணிக கடன்களை மீள் செலுத்தும் வீதம் 13 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. நாட்டில் 5 கோடியே 75 இலட்சம் வங்கி வைப்பாளர்கள் உள்ளனர்.

இவர்களில் 60 சதவீதமான வைப்பாளர்கள் 5,000 ரூபாவுக்கும் குறைவான வைப்புக்களையே வைத்துள்ளனர். ஆகவே, நிதி நிலைமை தொடர்பில் தற்போது மறுசீரமைப்புக்கள் ஏதேனும் செய்தால் அதனால் ஏதேனும் பாதிப்புக்கள் ஏற்படுமா என்பது குறித்து மத்திய வங்கி விசேட கவனம் செலுத்தியுள்ளது-என்றார். (அ)

# கிரிக்கெட் மட்டையால் தாக்கி ஒருவர் கொலை!

கொழும்பு, பெப். 22

பேராதனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முருதலாவ பிரதேசத்தில் நபர் ஒருவர் கிரிக்கெட் மட்டை மற்றும் பொல்லினால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த 55 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. தாக்குதல் சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக பேராதனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. பேராதனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஷ (அ)

# தொழுநோயை கட்டுப்படுத்த இலங்கை வரும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வைத்திய குழு

கொழும்பு, பெப். 22

தொழுநோயை முற்றாக கட்டுப்படுத்தும் நோக்கில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் விசேட வைத்திய குழுவொன்று எதிர்வரும் மார்ச் மாதம் நாட்டிற்கு வருகை தரவுள்ளது.

நாட்டில் அடுத்த 10 ஆண்டுகளில் தொழுநோயை முற்றாக கட்டுப்படுத்துவதற்கான வரைப்படத்தை உருவாக்க இந்த குழு சுகாதார அதிகாரிகளுக்கு உதவும் என தொழுநோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் தொழுநோயாளிகளின் அதிகரித்துள்ளதாக தொழுநோய் ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் பிரசான் ரணவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து தொழுநோயை முற்றாக கட்டுப்படுத்துவதற்கான விரிவான வேலைத் திட்டத்தை நாங்கள் ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம். இந்த முயற்சிக்கு உதவுவதற்காக விசேட வைத்திய குழுவை மார்ச் மாதம் இங்கு அனுப்புவதாக உலக சுகாதார ஸ்தாபனம் எங்களுக்குத் அறிவித்துள்ளது. அவர்கள் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் தொழுநோயை முற்றாக தடுக்க ஒரு வரைபடத்தை உருவாக்குவார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# 10000 போதை மாத்திரைகளுடன் மருந்தக உரிமையாளர் சிக்கினார்!

கொழும்பு, பெப். 22

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு அதிக விலையில் போதைமாத்திரைகளை விற்பனை செய்ததாக கூறப்படும் மருந்தகம் ஒன்றின் பெண் உரிமையாளர் ஒருவர் கல்கிஸை குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கிஸை குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் சந்தேக நபரிடமிருந்து 10 ஆயிரம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# வெப்பமான காலநிலை குறித்து மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 22

நாட்டில் நிலவும் வெப்பமான காலநிலையால், வெளியில் செல்வதை போதிய அளவு தவிர்ப்பதுடன், அடிக்கடி நிறைய திரவங்களை அருந்துமாறு மருத்துவ நிபுணர்கள் கடுமையாக அறிவுறுத்துகின்றனர்.

செயற்கை பானங்களைத் தவிர்த்து, நீர், இளநீர் போன்ற இயற்கை பானங்களை உட்கொள்வதன் மூலம் நீரேற்றத்திற்கு முன்னுரிமை கொடுப்பது மிகவும் நல்லது என சிரேஷ்ட வைத்திய ஆலோசகர் வைத்தியர் ஆனந்த விஜேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், முதியவர்கள் மற்றும் பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை பெறுபவர்கள் தீவிர வெப்பநிலை காரணமாக நீரிழப்பு அபாயத்தில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

“எனவே, ஆபத்தில் உள்ளவர்கள் சூரிய ஒளியின் வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்த வேண்டும் மற்றும் நீரிழப்பைத் தவிர்க்க நீரேற்றமாக இருக்க வேண்டும். குறைந்தது 2.5 லீற்றர் தண்ணீரைக் குடிக்க வேண்டும்” எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், வெளிப்புற நடவடிக்கைகளில் இருந்து, குறிப்பாக அத்தியாவசியமற்ற வெளிப்புற செயற்பாடுகளில் இருந்து விலகி இருக்குமாறு பாடசாலை மாணவர்களுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

“குழந்தைகள் வீட்டிற்குள் அல்லது நிழலில் விளையாட இடம் வழங்கப்பட வேண்டும். சிறிய குழந்தைகள் வெளியில் செல்லும்போது பாதுகாப்பு தொப்பிகள் அல்லது தொப்பிகளை அணிய ஊக்குவிக்க வேண்டும்,” என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# 13ஆவது திருத்தத்துக்கு சாவு மணி அடிக்காமல் ஜனாதிபதி முறைமையில் கை வைக்கக்கூடாது!

## வலியுறுத்துகின்றது சுதந்திரக் கட்சி

கொழும்பு, பெப். 22

“அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்காமல் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை மாற்றுவது பற்றி கருத்தாடல் இடம்பெறுவது நாட்டில் மீண்டும் பிரச்சினைகளுக்கே வழிவகுக்கும். ஜனாதிபதி முறைமை மாற்றம் பற்றி பேசுவதற்கு தற்போதைய ஜனாதிபதிக்கு மக்கள் ஆணை இல்லை.”

இவ்வாறு சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால கூறியவை வருமாறு,

“ஜனாதிபதி முறைமையில் மாற்றம் செய்யவேண்டுமெனில் அரசமைப்பு மறுசீரமைப்பு அவசியம். நாட்டில் பிரச்சினைகளுக்கு வழிவகுக்ககூடிய விடயம் இதுவாகும் என்பதால் எடுத்த எடுப்பிலேயே எதனையும் செய்துவிடமுடியாது.

ஜனாதிபதி முறைமையால் தான் இந்நாடு பெடரல் முறைமைக்கு சென்று, பிரிவினைவாதம் தலைதூக்கியது. எனவே, அரசமைப்பின்13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நீக்காமல், ஜனாதிபதி முறைமையை நீக்க முடியாது.

ஜனாதிபதி முறைமையை நீக்கிவிட்டு, அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கு வழங்கினால் ஆளுநர் நியமனம் மற்றும் முதலமைச்சருக்குள்ள அதிகாரம் எவை என்பன தொடர்பிலும் பிரச்சினை உள்ளது.

ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்போன்ற தேசிய ரீதியிலான தேர்தலொன்றின்போது மக்கள் நீதிமன்றம் முன்சென்று, அவர்களிடம் யோசனையை முன்வைத்து, கலந்துரையாடியே இதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். தற்போதைய ஜனாதிபதிக்கு இதனை செய்வதற்குரிய மக்கள் ஆணை இல்லை. அரசியல் இலாபம் பெறும் நோக்கிலேயே இது தொடர்பான கருத்தாடல் இடம்பெறுகின்றது.” - என்றார். (அ)

## சபாநாயகருக்கு...

சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித் தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்-

அரசியலமைப்பின் 123 (4)இன் பிரகாரம், ஏதேனும் சட்டமூலம் அல்லது ஏதேனும் சட்டமூலத்தின் ஏற்பாடுகள் அரசியலமைப்புக்கு முரணானதாக உள்ளதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்ற விடத்து, அல்லது தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுமிடத்து, அத்தகைய சட்டமூலம் அல்லது அத்தகைய ஏற்பாடு உயர்நீதிமன்றத்தின் தீர்மானிப்பில் கூறப்பட்டுள்ள முறையில் தவிர, நிறைவேற்றப்படுதல் ஆகாது என குறிப்பிடப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகள் மூலம் இச்சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்.

நிகழ்நிலை காப்பு சட்டம் தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைத்த பரிந்துரைகளில் 09 திருத்த யோசனைகள் சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை.

அவ்வாறான குறைபாடு ஏற்பட்டுள்ளதாக சபாநாயகரும் ஒப்புக்கொண்டார். நிகழ்நிலை காப்பு சட்டம் இந்த சபையில் சட்டவிரோதமாக நிறைவேற்றப்பட்டது. இது முற்றிலும் முறையற்றது.

சபாநாயகருக்கு சரியான அறிவுரைகளை வழங்குவது அதிகாரிகளினதும் பொறுப்பாகும். இந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்யாவிட்டால் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்படும். எனவே, இந்த குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும்-என்றார். (அ)

## தேர்தலுக்கு...

மார்ச் முதல் வாரத்தில் நடைபெறும் 14ஆவது சுற்று பேச்சுகளில் இலங்கை தரப்பில் எட்டப்பட வேண்டிய சில உடன்பாடுகள் மாத்திரமே எஞ்சியுள்ளன.

சில ஆதாரங்களை மேற்கோள் காட்டி இந்திய செய்தி நிறுவனமான மின்ட் வெளியிட்டுள்ள செய்தியில், எட்கா உடன்படிக்கை இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே இருதரப்பு வர்த்தகத்தை அதிகரிக்கும் என்பதுடன், ஒப்பந்தம் கையெழுத்திடும் விளிம்பில் உள்ளதாக கூறியுள்ளது.

ஒப்பந்தம் 2025 நிதியாண்டுக்குள் கைச்சாத்திடப்படும் என்பதுடன், இருதரப்பு பொருளாதார உறவில் ஒரு மைல்கல்லாக இது இருக்கும் என்றும் மின்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவுடன் 1998ஆம் ஆண்டு சுதந்திர வர்த்தக ஒப்பந்தமொன்றை இலங்கை கைச்சாத்திட்டிருந்தது. அது 2000ஆம் ஆண்டுமுதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் விரிவாக்கமாகவே எட்கா உடன்படிக்கை இருக்கும்.

எதிர்வரும் ஏப்ரல் அல்லது மே மாதத்தில் இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. இந்தத் தேர்தலில் ஆளுங்கட்சியான பாரதி ஜனதா கட்சி அதிக பெரும்பான்மையுடன் ஆட்சியை மீண்டும் கைப்பற்றும் என கருத்துக் கணிப்புகள் வெளியாகி வருகின்றன.

தேர்தலுக்கு முன்னர் எட்கா உடன்படிக்கையை கைச்சாத்திடுவது குறித்தும் புதுடில்லி தமது அவதானங்களை செலுத்தியுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களில் அறிய முடிகிறது. (அ)

# வைத்தியசாலையில் முரண்பட்டவர் கைது

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அலுவலர்களுடன் முரண்பாட்டில் ஈடுபட்ட நபரொருவர் பொலிஸாரினால் நேற்று கைதுசெய்யப்பட்டார்.

உயிரிழந்த நபரொருவரின் சடலத்தை பெறுவது சம்பந்தமாகவே வைத்தியசாலையின் மேற்பார்வையாளர் அலுவலகத்திற்கு சென்ற குறித்த நபர் அலுவலகர்களுடன் முரண்பட்டு அங்கிருந்த பெயர் பலகையையும் சேதப்படுத்திய நிலையில் வைத்தியசாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

முரண்பட்டவர் மதுபோ தையில் இருந்தாக தெரிவிக்கப்படும் நிலையில் சந்தேக நபரிடம் யாழ்ப்பா ணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சரத்...

அவர் இவ்வாறு கூறினார்.

“சரத் பொன்சேகா வந்து கதைத்தால், மஹிந்த நிச்சயம் ஏற்றுக் கொள்வார். முடியாது எனக்கூறி அவரை விரட்டமாட்டார். எது எப்படி இருந்தாலும் பொன்சேகா பாவம்.” - என்றார் எஸ்.பி.

## நீர்வேலியில்...

இதனையடுத்து படுகாயமடைந்த மாணவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## முடிந்தால்...

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜனாதிபதித் தேர்தலை அரசாங்கம் நடத்தாமல் ,சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்த திட்டமிடுவதாக எதிர்க்கட்சியினர் தெரிவித்து வருகின்றனர்.அவ்வாறெனில் ஏன் எதிர்க்கட்சிகள் தேர்தலுக்கு தயாராகின்றன என்பதை நான் கேட்க விரும்புகின்றேன்.

எவ்வாறெனினும் எந்த தேர்தலையும் எதிர்கொள்ள அரசாங்கம் தயாராக உள்ளது. ஜனாதிபதித் தேர்தல் உரிய காலப்பகுதியில் நடைபெறும்.அதனை நான் பொறுப்புடன் கூறுகிறேன்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும். போது முடிந்தால் அதில் வெற்றிபெற்று காட்டுமாறு எதிர்க்கட்சிகளுக்கு சவால் விடுக்கின்றேன்.

இம்முறை தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர்களின் உயிர்களைக் காப்பாற்றி, நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப செயற்படும் தலைவரைத் தவிர வேறு தலைவர்களுக்கு மக்கள் ஆதரவளிக்க மாட்டார்கள் என்பதை உறுதியாகத் தெரிவிக்கிறேன். மக்களை ஏமாற்றி போலித் தகவல்களை பரப்ப வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் மத்திய வங்கியின் உயரதிகாரிகள், அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் சம்பளம் பாரிய அளவில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. உண்மையில் அந்த விமர்சனங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியவை.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் அரசாங்க ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா மட்டுமே சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டு மத்திய வங்கி அதிகாரிகளுக்கு மட்டும் இந்தளவு பாரிய சம்பள அதிகரிப்பு வழங்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

சட்டங்கள், நியதிகள் எவ்வாறு இருந்தாலும் நாட்டின் தற்போதைய நிலையில் அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றது.

இன்னும் சில மாதங்களில் மின்சாரக் கட்டணம் குறைவடையும். அதனைத் தொடர்ந்து எமது பொருளாதாரம் பலமடைந்து கிராமங்கள் அபிவிருத்தியடையும் - என்றார். (அ)

## இலங்கை...

பிரதானமாக பொதுச் செயலாளர் எல்லா விடயங்களிலும் தலைவருக்கு உதவி செய்வதுடன் தலைவரோடு ஆலோசித்து கட்சியின் கருமங்களை நடத்துவார்.

விதி 9(அ)வின்படி கட்சியின் முதல்வர் தலைவரே. இதன்படி நிறைவேற்று அதிகாரம் தலைவருக்குரியது. விதி 13(அ)02 இன்படி பொதுச் செயலாளருக்கும் இணைப் பொருளாளருக்கும் கட்சியை நடத்தும் விடயத்தில் ஆலோசனை கூறுவதும் வழி நடத்துவதும் தலைவரின் கடமையும் அதிகாரமும் ஆகும்.

இவற்றின்படி பொதுச் செயலாளர் ஒரு நிர்வாக அதிகாரியே தவிர தனித்துவமான நிறைவேற்று அதிகாரம் கொண்டவரல்லர் என்பது தெளிவு.

பொதுச் செயாலாளர் ஒருவர் தாமாக பதவி விலகினாலோ, மத்திய செயற்குழுவினால் பதவி நீக்கம் செய்யப்பட்டாலோ அல்லது மரணித்தாலோ பதவி வறிதாக்கப்பட்டு வெற்றிடமாகும்.

விதி 13 (ஈ) 02 இன்படி பொதுச் செயலாளர் தமது கடமைகளை நிறைவேற்ற முடியாதவிடத்து துணைச் செயலாளர் அவரது கடமைகளை பதில் கடமை மூலம் நிறைவேற்றுவார். இது ஒரு நடைமுறை ஒழுங்காகும்.

எனினும் பொதுச் செயலாளர் பதவி வறிதாக்கப்பட்டு வெற்றிடமானால் அது விதி 13(உ)வின்படி மத்திய செயற்குழுவினால் நிரப்பப்படும். வெற்றிடம் பொதுச்சபையினால் தான் தெரிவுசெய்யப்படும் என்ற பரவலாக கூறப்படும் கருத்து தவறானது.

மேலும் 2024 ஆம் ஆண்டு தேர்தல்கள் ஆண்டாக இருப்பதால் தேசிய பட்டியல் போன்ற விடயங்களில் தனித்து அதிகாரம் உள்ளவர் என்பதால் இப்பதவி முக்கியத்துவம் பெறுவதாக கூறுவதும் தவறு.

இந்தக் கருத்து 2020 ஆம் ஆண்டின் பாராளுமன்ற தேசியப் பட்டியல் நியமனத்தை அப்போதைய பொதுச் செயலாளர் கடசியின் முறைப்படியான அங்கீகாரம் எதுவும் இல்லாமல் தலைவரின் ஒப்புதலின்றி மேற்கொண்டதை உதாரணமாக கொண்டதன் அடிப்படையில் எழுந்திருக்காலம். அதுவும் தவறான கருத்து. கட்சித் தலைவரினதும் கட்சியின் அங்கீகாரமும் பெறாத அந்த நியமனத்தை இரண்டு நாட்களுக்குள்ளே ஆட்சேபித்திருந்தால் அந்த நியமனத்தை இரத்துச் செய்திருக்கலாம். ஆனால் அது பிரதேச வாதத்திற்கு இடமளிக்கும் என்பதாலேயே அவ்வாறு செய்யவில்லை.

கட்சியின் தலைவர் உள்ளிட்ட சகல பதவிகளுக்குமான தெரிவு வாக்கெடுப்பு போட்டி மூலம் இடம்பெறுவது முழுமையாக தவிர்க்கப்படல் வேண்டும் என்ற எனது ஆணித்தரமான கருத்தை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். அவ்வாறுதான் கடந்த 74 வருடங்களாக நிகழ்ந்து வருகின்றது என்றும் கூறினார்.

மேலும், இம்முறை இடம்பெற்ற வாக்கெடுப்பு தெரிவு முலம் கட்சி சில கூறுகளாக பிளவுபட்டுள்ளமையை யாரும் மறுதலிக்க முடியாது. இந்த விடயத்தில் ஒரு பிரபல தேசிய பத்திரிகையின் நீண்ட கால ஆசிரியரான வீரகத்தி தனபாலசிங்கம் தமது கட்டுரை ஒன்றில்

கட்சியின் தலைவரை ஏகமனதாகவே தெரிவு செய்யும் பாரம்பரியத்தை தந்தை செல்வா ஏன் உறுதியாகக் கடைப் பிடித்து வந்தார் என்பது இப்போது எல்லோருக்கும் புரியும். தலைவர் பதவிக்கு அந்த ஆனானப்பட்ட அமிர்தலிங்கமும் இராசதுரையும் போட்டி போடத் தலைப்பட்டபோது அவர்களைச் சாதுரியமாகக் கையாண்ட தந்தை செல்வா எங்கே...” என்று கூறிய கருத்துடன் நான் முழுமையாக உடன்படுகிறேன். ஜனநாயகம் என்ற பெயரில் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தக்கூடிய எந்த பதவிக்கும் வாக்கெடுப்பு தேர்தல் கட்சி நலன் கருதி இடம்பெறக்கூடாது என்பதே எனது திடமான நிலைப்பாடு. அப்படி ஒரு நிகழ்வு இடம்பெற்றால் அதில் நான் நிச்சயமாக கலந்து கொள்ள மாட்டேன் என்பதையும் பதிவு செய்து கொள்கிறேன்-என்றார்.

(அ)

## ஜனாதிபதித்...

எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். ஒக்ரோபர் மாதமளவில் ஜனாதிபதி தேர்தலை நடத்த முடியும். ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்க அரசமைப்பில் ஏற்பாடு இல்லை. அதற்கான தேவைப்பாடும் அரசுக்கு இல்லை.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடத்தப்படுமா என என்னால் கூற முடியாது. அவ்வாறு நடத்துவதற்கு ஜனாதிபதிக்கு முடியும். அதற்கான சட்டப்பூர்வ அனுமதி அவருக்கு உள்ளது. ஜனாதிபதி தேர்தலுக்கு மட்டும் நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும், குறைநிரப்பு பிரேரணை ஒன்றின் ஊடாக பொதுத்தேர்தலுக்கான நிதியை பெற்றுக்கொள்ள முடியும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பில் நீதி அமைச்சர் என்ற வகையில் நானோ அல்லது அமைச்சரவையில் வேறு எவரோ யோசனை எதையும் முன்வைக்கவில்லை. அதற்கான உத்தேசமும் இல்லை.

தற்போதைய சூழ்நிலையில் அது ஜனநாயக ரீதியிலான பொறிமுறையும் அல்ல. சர்வஜன வாக்கெடுப்பை தவறாக பயன்படுத்துவது ஜனநாயகம் அல்ல. 1982 இல் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பால் ஏற்பட்ட கறுப்பு புள்ளி இன்னும் மாறவில்லை-என்றார். (அ)

## உலகெங்கும்...

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய சாள்ஸ் நிர்மலநாதன்,

இலங்கை சுதந்திரம் அடைந்து 76 வருடங்கள் கடந்துள்ள போதிலும் சரியான பொருளாதார கொள்கை இன்மையால் மக்கள் பல்வேறு பிரச்னைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

தமிழர்களை ஒடுக்குவதற்கு புதிய சட்டங்கள் உருவாக்கப்பட்டதுடன், தமிழினத்தை அழிப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் காரணமாகவே இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

வடக்கு கடற்பரப்பில் கடற்றொழிலாளர்கள் மீன்பிடியில் ஈடுபட முடியாத நிலையில் உள்ளனர். வடக்கு கடற்பரப்பு பாரிய வளச் சுரண்டல்களுக்கு உள்ளாகி வருகிறது. இதற்கு தென்னிலங்கை ஆட்சியாளர் பொறுப்புக்கூற வேண்டும்.

இலங்கையில் சகல மக்களும் இன, மத மற்றும் மொழி ரீதியாக சமத்துவத்துடன் வாழக்கூடிய வகையில் அரசியலமைப்பில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு பொருளாதார கொள்கையினூடாக பயணிக்காவிட்டால் இன்னும் 50 வருடங்கள் கடந்தாலும் இலங்கை இவ்வாறே இருக்கும்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி வழக்கு விசாரணை இன்று நடைபெறும்

முல்லைத்தீவு, பெப். 22

**கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி தொடர்பான வழக்கு இன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இதன்போது, மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பான காலக்கணிப்பு வெளியாகலாமென எதிர்பார்க்கப்படுகிறது.**

கொக்குத்தொடுவாயில் மனித எச்சங்கள் அடையாளம் காணப் பட்டதை தொடர்ந்து, தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா, யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவன், முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவா உள்ளிட்ட குழுவினரின் மேற்பார் வையில் அகழ்வு பணிகள் நடந் தன.

இந்த மனித எலும்புக்கூடுகள் தொடர்பான காலக்கணிப்பை தொல்லியல் பேராசிரியர் ராஜ் செமதேவா முல்லைத்தீவு நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். அந்த விவரம் இன்று தெரிய வரும்.

முன்னதாக, கொக்குத்தொடு வாய் மனிதப் புதைகுழியில் மீட்கப் பட்ட எலும்புக்கூடுகள், கொக்குத் தொடுவாய் இராணுவ முகாம் மீதான தாக்குதலில் உயிரிழந்த விடுதலைப் புலிகள் அமைப்பினரு டையவை என தமிழ்பக்கம் செய்தி வெளியிட்டிருந்தது. இந்த சம்பவம் 1995 இல் நடந்தது. (அ)

# அனுமதிப்பத்திரம் இன்றி கால் நடைகளை வாகனத்தில் ஏற்றிச் சென்ற இருவர் கைது

கிளிநொச்சி, பெப். 22

அனுமதிப்பத்திரம் இன்றி கால் நடைகளை வாகனத்தில் ஏற்றிச் சென்ற இருவர் கைது செய்யப்பட் டுள்ளனர்.

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக் கணை சந்திப் பகுதியில் இரவு நேர காவல் கடமையில் ஈடுபட்ட பொலிஸாரின் வீதிச் சோதனை யின் போது இவ்வாறு கைது செய் யப்பட்டுள்ளனர்.

7 எருமை மாடுகளை ஏற்றி வேறு பகுதிக்கு கொண்டு செல்ல முற்பட்ட கப்ரக வாகனத்துடன் அதன் வாகனச் சாரதி மற்றும் வாகன உதவியாளர் இருவரும் இவ் வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

# மோதலால் 17 மாணவர்கள் காயம்

கொழும்பு, பெப். 22

பாடசாலை மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் 17 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

காயமடைந்த மாணவர்கள் மஹி யங்கனை வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர். பயிற்சி ஒன் றிற்காக ரந்தெம்பே பிரதேசத்தில் உள்ள தேசிய பயிற்சி மையத்திற்கு கொழும்பு , கம்பஹா உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களில் இருந்து பாடசாலை மாணவர்கள் சென் றுள்ளனர். இதன்போது மாணவர் கள் மத்தியில் ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறியதில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. (அ)

# ஐ. பி. எல். ரி -20 தொடர் மார்ச் 22இல் தொடக்கம்:

## முதல் ஆட்டத்தில் சென்னை - குஜராத்

புதுடில்லி, பெப். 22

ஐ. பி. எல். ரி -20 கிரிக்கெட் தொடரின் 17ஆவது தொடர் வரும் மார்ச் 22ஆம் திகதி தொடங்கும் என ஐ. பி. எல். தலைவர் அருண் துமால் தெரிவித்துள்ளார்.

ஐ. பி. எல். ரி -20 கிரிக்கெட் தொடரின் 17ஆவது சீசனுக்கான போட்டி அட்டவணை இன்னும் வெளி யிடப்படவில்லை. இதற்கு காரணம் பொதுத்தேர்தல் தான். வரும் ஏப்ரல், மே மாதங்களில் பொதுத் தேர்தல் நடைபெறக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த காலக்கட்டங்களில்தான் ஐ. பி. எல். ரி -20 தொடரின் போட்டிகளை நாட்டின் பல்வேறு பகுதி களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் காரண மாக ஐ. பி. எல். அட்டவணை அறிவிப்பதில் தாமதம் நிலவுகிறது.

இந்நிலையில் ஐ. பி. எல். தலைவர் அருண் துமால் கூறும்போது,

"ஐ. பி. எல். தொடரின் முதல் 15 நாட்களுக்கான அட்டவணை மட்டுமே அறிவிக்கப்படும், மீதமுள்ள போட்டிகளுக்கான அட்டவணை விவரம் பொதுத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் முடிவு செய்யப்படும்.

மார்ச் 22ஆம் திகதி தொடரை தொடங்க வேண்டும் என திட்டமிட்டுள்ளோம். ஐ. பி. எல். போட்டி அட்ட வணை தொடர்பாக அரசு துறைகளுடன் நெருக்கமாக பணியாற்றி வருகிறோம், முதலில் ஆரம்ப கட்ட போட்டிகளின் அட்டவணையை வெளியிடுவோம். முழு போட்டியும் இந்தியாவில் நடைபெறும்" என்றார்.

மக்களவை தேர்தலுக்கான அறிவிப்பு அடுத்த மாதத்தின் தொடக்கத்தில் வெளியாகும் என எதிர்பார்க் கப்படுகிறது. இதன் பின்னர் ஐ. பி. எல். தொடரின் முழு அட்டவணையும் வெளியாகும் என தெரிகிறது.

2009ஆம் ஆண்டு ஐ. பி. எல். தொடர், பொதுத் தேர்தல் காரணமாக தென்னாபிரிக்காவில் நடத்தப்பட்டது.

இதன் பின்னர் 2014ஆம் ஆண்டு தேர்தலையொட்டி ஐ. பி. எல். தொடரின் ஒரு பகுதி ஆட்டங்கள் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடத்தப்பட்டது. இருப்பினும் 2019ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெற்ற காலங்க




ளில் ஐ. பி. எல். தொடர் முழுவதுமே இந்தியாவில் நடத்தப்பட்டது.

இம்முறை வரும் ஜூன் 2ஆம் திகதி இருபது 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் அமெரிக்கா மற்றும் மேற்கு இந்தியத் தீவுகளில் தொடங்குகிறது. இதனை கருத்தில் கொண்டு ஐ. பி. எல். தொடரை மே மாத கடைசிக்குள் முடிக்கும் வகையில் போட்டி அட்ட வணை தயாராகி வருகிறது. இதனால் ஐ. பி. எல். இறுதிப் போட்டி மே 26ஆம் திகதி நடத்தப்படக்கூடும் என கூறப்படுகிறது.

ஐ. பி. எல். விதிமுறைகளின்படி கடந்த ஆண்டு இறு திப் போட்டியில் விளையாடிய அணிகளே இம்முறை தொடக்க ஆட்டத்தில் மோத வேண்டும். இதன்படி மார்ச் 22ஆம் திகதி சென்னை சேப்பாக்கம் எம்.ஏ.சிதம் பரம் மைதானத்தில் நடப்பு சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் - குஜராத் ரைட்டன்ஸ் அணியுடன் பலப் பரீட்சை நடத்தும்.

# இலங்கைக்கு வரவுள்ள ஈரான் ஜனாதிபதி

கொழும்பு, பெப். 22

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மிக விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஹூசைன் அமீர் அப்துல்லாஹின் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு அந்நாட்டுக்கு வருகை தந்துள்ள ஈரான் வெளிவிவகார அமைச்சர்,

இங்கு இடம்பெற்ற கூட்டு செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டபோது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.(அ)

# மின்கட்டணத்தை 20 வீதம் குறைப்பதற்கு யோசனை!

கொழும்பு, பெப். 22

மின் கட்டணத்தை சுமார் 20 வீதத்தால் குறைப்பதற் கான புதிய யோசனையை இலங்கை மின்சார சபை முன் வைத்துள்ளது.

இந்த புதிய யோசனை இலங்கை பொது பயன்பாடு கள் ஆணைக்குழுவிடம் இன்று கையளிக்கப்படவுள் ளது.

மின் கட்டணத் திருத்தம் தொடர்பில் கடந்த 15ஆம் திகதி பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக் களை ஆராய்ந்ததன் பின்னர் புதிய யோசனையை முன் வைக்குமாறு இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக் குழு, இலங்கை மின்சார சபைக்கு அறிவித்திருந்தது. (அ)

# உயர்த்திய மின் கட்டணத்தை முழுமையாக நீக்கத் தீர்மானம்

கொழும்பு, பெப். 22

கடந்த ஒக்ரோபர் மாதம் உயர்த்தப்பட்ட மின்சார கட்டண சதவீதத்தை புதிய திருத்தத்தின் ஊடாக முழு மையாக நீக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று பாராளுமன்றத்தில் கருத்து வெளி யிடும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அதன்படி, வீடுகள் மற்றும் மத வழிபாட்டு தலங்கள் என்ற வகையில் ஒக்ரோபர் மாதம் உயர்த்தப்பட்ட 18 சதவீத கட்டண உயர்வு இங்கு முழுமையாக குறைக்கப் படும்.

கடந்த ஒக்டோபர் மாதம் சுற்றுலாத்துறைக்காக அதிகரிக்கப்பட்ட 12 சதவீத மின் கட்டண உயர்வை முழுமையாக நீக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஒக்டோபர் மாதத்தில் அரச நிறுவனங்க ளின் மின்கட்டணம் 24 வீதத்தால் அதிகரிக்கப்பட்டது டன், புதிய திருத்தத்தின் பிரகாரம் அத்தொகையும் குறைக்கப்படவுள்ளது. (அ)

# 6 உணவுப் பொருட்களின் இறக்குமதி வரி அதிகரிப்பு

கொழும்பு, பெப். 22

உளுந்து, பாசிப்பயறு , கௌபி , சோளம், குரக்கன் மற்றும் தினை ஆகியவற்றின் இறக்குமதிக்கு விதிக்கப் படும் விசேட பண்ட வரியை உயர்த்தி புதிய வர்த்த மானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானியின்படி, உளுந்து (மற்றவை) இது வரை ஒரு கிலோ கிராமிற்கு 200 ரூபாவாக காணப்பட்ட விசேட பண்ட வரி 300 ரூபாவாக அதிகரிக்கப்பட் டுள்ளது.

கௌபி (மற்றவை), விதை குரக்கன், விதைகள் - (தினை) உள்ளிற்றவைக்கான இறக்குமதி விசேட பண்ட வரி ஒரு கிலோ கிராமிற்கு 70 ரூபாயிலிருந்து 300 ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

இது தவிர சோளத்துக்கும் 25 ரூபாய் விசேட பண்ட வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, சோளம், உளுந்து, பச்சைப்பயறு, கௌபி மற்றும் குரக்கன் ஆகியவற்றின் இறக்குமதியை விவசாய அமைச்சின் பரிந்துரையின் பேரில் மேற் கொள்ளவேண்டுமென வர்த்தமானி அறிவித்தலில் வலி யுறுத்தப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ரஷ்யாவை குறிவைத்து சக்தி வாய்ந்த அணுகுண்டுகளை நகர்த்துகிறதா அமெரிக்கா?

மாட் பிரேசி

பிரிட்டனின் சஃபோல்க்கில் உள்ள அமெரிக்க விமானப் படைத் தளத்திற்கு மீண்டும் அணு ஆயுதங்களை அமெரிக்கா அனுப்பப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. 15 ஆண்டுகளுக்குப் முன் சஃபோல்க் தளத்தில் இருந்து அனைத்து அணு ஆயுதங்களையும் திரும்பப் பெற்றுக் கொண்டது அமெரிக்கா.




இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஹிரோஷிமாவில் வீசப்பட்ட 'லிட்டில் பாய்' என்ற அணு குண்டை விட பன் மடங்கு சக்தி வாய்ந்த அணுகுண்டுகளை பாதுகாப்பாக சேமித்து வைப்பதற்கான வசதிகள் சஃபோல்க்கின் ஆர்ஏஎப் லேகன்ஹீத் (RAF Lakenheath) தளத்தில் உருவாக்கப்பட்டு வருவதாக ஆவணங்கள் குறிப்பிடுகின்றன.

**அமெரிக்காவின் திட்டங்கள்**

ஆர்ஏஎப் லேகன்ஹீத் தளத்தில் தற்போது 48ஆவது ஃபைட்டர் விங் எனும் அமெரிக்க விமானப்படைப் பிரிவு உள்ளது. இந்தப் பிரிவு லிபர்ட்டி விங் என்றும் அழைக்கப்படுகிறது. F-35A லைட்னிங் II எனும் அதிநவீன போர் விமானங்கள் இங்கு நிலை நிறுத்தப்பட்டுள்ளன.

ஐக்கிய அமெரிக்க விமானப்படை (United States Air Force- யுஎஸ்ஏஎப்) அறிக்கைப்படி, போர்க்களத்திற்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட, குறுகிய தூர இலக்குகளை தாக்கும் திறன் கொண்ட ஆயுதமான B61-12 தெர்மோநியூக்ளியர் குண்டை இந்த போர் விமானங்கள் மூலம் எடுத்துச் செல்ல வெற்றிகரமாக சோதனைகள் செய்யப்பட்டன.

ஆர்ஏஎப் லேகன்ஹீத்தின் "எதிர்கால அணுசக்தி திட்டத்திற்கு" தேவையான பாதுகாப்பான தங்குமிடங்களை கட்டுவதற்கான ஒப்பந்தம் குறித்து விவரிக்கும் ஆவணங்கள் அமெரிக்க பாதுகாப்புத் துறையால் வெளியிடப்பட்டன. பின்னர் அவை திரும்பப் பெறப்பட்டன.

இந்த விமானப்படைத் தளத்தின் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் வீரர்களுக்கான தங்குமிடங்கள் கட்டுவதற்கான ஒப்பந்தங்கள் அவை.

கூடுதலாக, அமெரிக்க இராணுவத் துறை பட்ஜெட் ஆவணத்தின்படி , இந்த சஃபோல்க் தளத்தின் அடித்தளத்தில் 'ஷூரிட்டி டார்மிட்டரி' (surety dormitory) எனப்படும் வசதியை உருவாக்க லட்சக்கணக்கான டாலர் ஒதுக்கப்பட்டுள்ளது. இவை அணு ஆயுதங்களுக்கான சேமிப்பு வசதிகள் என கூறப்படுகிறது.

ஆர்ஏஎப் தளம் 1941இல் லேகன்ஹீத்தில் திறக்கப்பட்டு, இரண்டாம் உலகப் போரின் போது செயல்பட்டது.

நேட்டோவிற்கும் சோவியத் ஒன்றியத்திற்கும் இடையிலான பனிப்போர் தீவிரமடைந்ததால், அமெரிக்க விமானப் படை 1951இல் தளத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டை ஏற்றுக்கொண்டது.

தளத்தில் 4,000 அமெரிக்க இராணுவ வீரர்களும் மேலும் 1,500 பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க சிவிலியன் ஊழியர்களும் உள்ளனர்.

**அமெரிக்க அணு ஆயுதங்கள் மீண் டும் பிரிட்டனில் நிலைநிறுத்தப்படுமா?**

லண்டன் கிங்ஸ் கல்லூரியின் போர் ஆய்வுகள் துறையின் பேராசிரியரான சர் லாரன்ஸ் ஃப்ரீட்மேன், "இந்த திட்டங் கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக இருக்கலாம்" என கூறினார்.




"ஒருவேளை ஐரோப்பாவில் உள்ள தளங்களில் இருந்து மற்ற ஆயுதங்கள் அகற்றப்பட்டால், தங்குமிடங்கள் கூடு தல் திறன் கொண்டதாக இருக்கலாம்" என்கிறார் அவர்.

"சேமிப்பு வசதியை உருவாக்குவது ஒரு விஷயம் என்றால், அமெரிக்க ஆயு தங்கள் பிரிட்டனில் இருக்கப் போகிறது என்ற உண்மையை மறைப்பது மற்றொரு விஷயம். எனவே இந்த நடவடிக்கை என்பது நாடுகளுக்கிடையேயான ஆயுதப் போட்டியில் ஏதோ ஒரு பெரிய மாற்றமாக இல்லாமல், ஒரு சாதாரணமான நடவடிக்கையாகவும் கூட இருக்கலாம்" என அவர் கூறினார்.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் அணு ஆயுதங்கள் இருப்பதை உறுதிப்படுத்தவோ மறுக்கவோ கூடாது என்ற கொள்கையை நீண்ட காலமாக பிரிட்டன் மற்றும் நேட்டோ கடைபிடித்து வருகிறது.

**ரஷ்யாவுக்கு எதிராக பிரிட்டனில் அமெரிக்க அணு ஆயுதங்களா?**

"இந்த திட்டங்கள் உக்ரேனில் நிலவும் சூழ்நிலையுடன் தொடர்புடையவை என்று நான் நினைக்கவில்லை" என்கிறார் சர் லாரன்ஸ்.

"ரஷ்யாவுடன் அதிகரித்து வரும் பதற்றத்தின் காரணமாக இது இருக்கலாம்," என்று அவர் கூறினார்.

ஆனால் நேட்டோவின் முன்னாள் மூத்த அதிகாரியான வில்லியம் அல்பர்கி கூறுகையில், "ரஷ்யாவின் நடவடிக்கைகளால் ஐரோப்பா முழுவதும் அதிகரித்து வரும் ஆபத்தான அச்சுறுத்தல் சூழலுக்கு இது ஒரு பதிலடி" என்கிறார். இவர் இப்போது சர்வதேச மூலோபாய ஆய்வுகள் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார்.

பெலாரஸில் ரஷ்ய அணு ஆயுத படைகள் நிலைநிறுத்தப்பட்டது, உக்ரைன் மீதான படையெடுப்பு மற்றும் விளாடிமிர் புடின் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கான அச்சுறுத்தல்கள் பெருமளவில் அதிகரித்தது போன்றவற்றை அவர் மேற்கோள் காட்டினார்.



**'இந்த தளம் ரஷ்யாவின் இலக்காக மாறும்'**

அமெரிக்க விஞ்ஞானிகளின் கூட்டமைப்பைச் சேர்ந்தவர் ஹான்ஸ் கிறிஸ்டென்சன். அணு ஆயுதங்கள் ஆர்ஏஎப் லேகன்ஹீத் தளத்திற்கு மீண்டும் கொண்டு வரப்படுவதற்கான சாத்தியங் கள் குறித்து குரல் எழுப்பிய முதல் நபர்களில் இவரும ஒருவர்.

"ஒரு தளத்தில் அணு ஆயுதங்கள் இருந்தால், அந்த தளம் ரஷ்யாவுடனான அணுசக்தி மோதலில் இலக்காகக் கூடும் என்பதில் சந்தேகமில்லை" என்று அவர் கூறினார்.

"ஒரு நாடு அணு ஆயுதங்களை வைத்திருந்தால், பின் அது ஒரு வித்தியாசமான போர் விளையாட்டாக மாறும் என்பதில் சந்தேகமில்லை" என்றும் கிறிஸ்டென்சன் கூறுகிறார்.

ஆனால், "இந்த தளம் இப்போதே ரஷ்யாவின் இலக்காக மாறியிருப்பதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன" என்று அல்பர்கி கூறினார்.

"நான் ஒரு ரஷ்ய இராணுவத்தைச் சேர்ந்த திட்டமிடும் நிபுணராக இருந்தால், இந்த தளத்தை தாக்க முன்பே முடிவு செய்திருப்பேன். நீங்கள் ரஷ்ய தொலைக்காட்சிகளைப் பார்த்தால், பிரிட்டனை பற்றியும் பிரிட்டனைத் தாக்குவது பற்றியும் அதிகம் பேசுகிறார்கள்" என்கிறார் அவர்.

பிரிட்டனுக்கு எதிராக ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் அங்கீகாரம் அளிப்பார் என்று அல்பர்கி நம்புகிறார்.

மேலும், "அவர் திறமையானவர் என்று சொல்வது மிகையாக இருக்கும். பிரச்னைக்கான தீர்வு இல்லை என்றோ அல்லது பின்விளைவுகள் வராது என நினைத்தாலோ, அவர் இதைச் செய்வார் என்று நினைக்கிறேன்" என்று கூறினார்.

**அடுத்து என்ன நடக்கும்?**

அணு ஆயுதக் குறைப்புக்கான பிரசார அமைப்பு (Campaign for Nuclear Disarmamen t- சிஎன்டி) ஆர்ஏஎப் லேகன்ஹீத் தளத்திற்கு வெளியே போராட்டம் நடத்தி எதிர்ப்பு தெரிவித்தது.

சிஎன்டி பொதுச் செயலாளர் கேட் ஹட்சன் பேசுகையில், "இங்கே அணு ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டால், நாங்கள் அதை அகற்ற வலியுறுத்துவோம்." என்றார்.

"ஷூரிட்டி டார்மிட்டரி" தங்குமிடத்தை கட்டுவது சட்டப்பூர்வமானதா என்பதை ஆராய சட்ட நிறுவனமான லீ டேக்கு (Leigh Day) இந்த அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

வழக்கறிஞர் ரிக்கார்டோ காமா இதுகுறித்து பேசுகையில், "லேகன்ஹீத் தளத்தில் அணுகுண்டுகளை சேமிப்பது குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல் விளைவுகளை ஏற்படுத்தாது என்று பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சகம் கூறுகிறது. ஆனால், அந்த முடிவை எடுப்பதற்கு முன்னர் விமானப்படை தளத்தில் அணு ஆயுதங்களை நிலைநிறுத்துவதன் சாத்தியமான சுற்றுச்சூழல் விளைவுகளை அவர்கள் புறக்கணித்ததாக வாதிடுகின்றனர் சிஎன்டி அமைப்பினர். அணுசக்தி விபத்து ஏற்படுவதற்கான சாத்தியம் உட்பட" என்கிறார்.

ஈழநாடு



# தனக்கென்று ஒரு மரபை விட்டுச்செல்வதில் ஜனாதிபதி எதிர்நோக்கவேண்டிய சவால்



கலாநிதி ஜெகான் பெரேரா

ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி அண்மிக்கும் நிலையில், அதில் வெற்றி பெறுபவர் யாராக இருக்கலாம் என்பதைப் பற்றி மாத்திரமல்ல, தேர்தலே நடத்தப்படுமா என்பது பற்றியும் ஊகங்கள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படத்தான் வேண்டுமா என்று ஒரு விவாதமும் கூட மூண்டிருக்கிறது.

நாட்டை அபிவிருத்திப் பாதையில் வழிநடத்திச் செல்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மேலும் காலஅவகாசம் வழங்கவேண்டும் என்று உணரும் பலர் இருக்கிறார்கள். தெற்காசியா மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்க அமைச்சர் டொனால்ட் லூ அத்தகைய ஒருவராக இருக்கலாம். இலங்கையின் பொருளாதார மீட்சி உலகின் இந்தப் பகுதியில் மிகப்பெரிய மீட்சிகளில் ஒன்றாகும் என்று அவர் கூறியிருக்கிறார்.

மறுபுறத்தில், ஜனாதிபதி ஆட்சிமுறையை சாத்தியமானளவு விரைவாக ஒழித்துவிடுவதற்கு ஆதரவாக வாதிடுபவர்களும் இருக்கிறார்கள். ஜனாதிபதி தேர்தலை நடத்தவேண்டியதில்லை என்பதும் அவர்களின் கருத்தாக இருக்கிறது.

ஜனாதிபதி பதவி மட்டுமீறிய அதிகாரங்களைக் கொண்டதாகவும் அதற்கு தெரிவுசெய்யப்படுபவர்களினால் அந்த அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடியவையாக இருப்பதாகவும் பொதுவில் நம்பப்படுவதால் அதை ஒழித்துவிடவேண்டும் என்று வலுவாக முறையில் வாதிடப்படுகிறது. இந்த வாதம் கடந்த காலத்தில் ஜனாதிபதி தேர்தல்களில் வேட்பாளராக களத்தில் நின்றவர்களில் சிலரால் தேர்தல் பிரசார தொனிப்பொருளாகவும் முக்கியத்துவப் படுத்தப்பட்டது.

ஆனால், ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாக உறுதியளித்தவர்கள் தேர்தல்களில் வெற்றிபெற்ற பிறகு அவ்வாறு செய்யத் தவறியதுடன் மாத்திரம் நின்றுவிடாமல் தங்களால் இயன்றவரை நீண்ட காலத்துக்கு அந்தப் பதவியில் நீடிப்பதற்கு விடாமுயற்சியையும் மேற்கொண்டனர். ஜனாதிபதி ஆட்சிமுறை இன்று வரை நீடிப்பதற்கு அதுவே காரணம் எனலாம்.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று அதிகாரத்துக்கு வருபவர்கள் அந்த பதவியை ஒழிக்க விரும்புவார்கள் என்ற நம்பிக்கை இல்லை என்ற நிலையில், அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக ஜனாதிபதி பதவி ஒழிக்கப்படவேண்டும் என்ற ஒரு அபிப்பிராயமும் முன்வைக்கப்படுகிறது. ஜனாதிபதி ஆட்சிமுறையே நாட்டை பொருளாதார அனர்த்தத்துக்கு இட்டுச்சென்றது என்ற உண்மையும் இந்த அவசரத்துக்கு காரணம். ஆனால், அதை ஒழிப்பது எந்தளவுக்கு நடைமுறைச் சாத்தியமானது என்பதே கேள்வி.

அரசியலமைப்பு மத்திய வகிபாகத்தை ஜனாதிபதி பதவிக்கு வழங்குவதால் தற்போதைய ஆட்சிமுறை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை என்று அழைக்கப்படுகிறது. இந்த மத்திய பதவியை இல்லாமல் செய்வது தற்போதைய ஆட்சிமுறைக் கட்டமைப்புக்கு மரண ஆபத்தை தோற்றுவிப்பதற்கு சமமானதாகும். ஜனாதிபதி பதவி மீது செய்யக்கூடிய சத்திரசிகிச்சையின் விளைவாக தோன்றக்கூடிய ஓட்டையை கைதேர்ந்த முறையிலான அரசியலமைப்பு செயன்முறையின் மூலமாக நிரப்பிவிடமுடியும் என்று வாதிடப்படலாம்.

ஆனால் அரசாங்கத்தையும் எதிரணியையும் உள்ளடக்கிய அரசியல் கருத்தொருமிப்பு இல்லாமல் இந்த சீர்திருத்தங்களை விரைவாகச் செயயக்கூடியதாக இருக்குமா என்பது முக்கியமான கேள்வி. நாடு தற்போது எதிர்நோக்கு கின்ற பிரச்சினைகளைப் பொறுத்தவரை அத்தகைய கருத்தொருமிப்பை காண முடியவில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதானால், அதைப் பதிலீடு செய்யக்கூடிய புதிய ஆட்சிமுறை பற்றி மக்களுடனும் அரசியல் கட்சிகளுடனும் விரிவான கலந்தாலோசனை அவசியம். அந்த ஆட்சிமுறை இன,மத சிறுபான்மைச் சமூகங்களின் எதிர்பார்ப்புகளையும் அபிலாசைகளையும் நிறைவுசெய்கின்ற ஒன்றாகவும் இருக்கவேண்டும். தற்போதைய தருணத்தில் அத்தகைய ஒரு கருத்தொருமிப்பு இல்லை.

**மக்கள் செல்வாக்கு இல்லாத அரசாங்கம்**

புதிய அரசியலமைப்பு குறித்தும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் குறித்தும் பல சந்தர்ப்பங்களில் ஆராயப்பட்டிருக்கிறது. ஆனால், கடந்த காலத்தைய அரசியலமைப்பு வரைவுத் திட்டங்களினால் தற்போது மக்களுடனும் அரசியல் கட்சிகளுடனும் கலந்தாலோசனை நடத்தவேண்டிய தேவையைப் பதிலீடு செய்யமுடியாது. 'அறகலய' மக்கள் கிளர்ச்சி மற்றும் பொருளாதார வங்கு ரோத்து அனுபவங்களுக்கு பிறகு சூழ் நிலைகள் தீர்க்கமான முறையில் மாறி விட்டன.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலும் இன,மத சிறுபான்மைச் சமூகங்களை ஆட்சிமுறைக்குள் சேர்த்துக்கொள்வது தொடர்பிலும் கருத்தொருமிப்பு இல்லாத பட்சத்தில் மாற்றங்கள் மந்த கதியிலானவையாகவே இருக்கும் என்பதையும் ஏற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாகும். இதை மாகாணசபை தேர்தல் முறையில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு 2017 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட செயன்முறை இன்னமும் கூட பூர்த்தி செய்யப்படாமல் இருப்பதில் இருந்து புரிந்துகொள்ள முடியும். ஐந்து வருடங்களாக மகாணசபைகளுக்கு தேர்தல்கள் நடத்தப்படாமல் இருக்கிறது.

அரசியலமைப்பின் ஒரு பகுதியாக 36 வருடங்களுக்கு முன்னர் கொண்டுவரப்பட்ட பின்னரும் மாகாணசபைகள் செயற்படாமலேயே இருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கது. மாகாணசபைகளின் பொலிஸ் அதிகாரங்கைளை இல்லாமல் செய்வதற்கு அரசியலமைப்புக்கு திருத்தம் ஒன்றைக் கொண்டுவருவதற்கான யோசனையும் முன்லைக்கப்படுகிறது. சகலரும் தேர்தல் மீது கவனத்தைத் திருப்பியிருக்கும் நிலையில் அரசியலமைப்பு மாற்றத்தை துரிதப்படுத்துவது என்பது ஒரு உகந்த தெரிவாகத் தோன்றவில்லை.

ஜனாதிபதி தேர்தல் போட்டியில் எதிரணி வேட்பாளர்கள் கணிசமான இடைவெளி வித்தியாசத்தில் முன்னணியில் இருப்பதாக கருத்துக் கணிப்புக்கள் திரும்பத் திரும்ப காட்டுகின்றன. இந்த கருத்துக்கணிப்புகளின் முடிவுகள் யதார்த்த நிலைக்கு நெருக்கமாக இருக்குமானால், அதிகப் பெரும்பான்மையான மக்கள் தேர்தல் ஒன்றை எதிர்பார்க்கிறார்கள் என்றே ஊகிக்கமுடியும். ஜனாதிபதி விக்கிரமசிங்க தலைமையில் அதிகாரத்தில் காலூன்றியிருக்கும் அரசாங்கத்தை வேறு எதையும் விட தேர்தல் ஒன்றின் மூலமாகவே பதவியில் இருந்து அகற்றமுடியும் என்றே மக்கள் நம்புகிறார்கள்.

இரு வருடங்களுக்கு முன்னர் மக்கள் கூட்டத்தின் ஆவேசத்துக்கு பயந்து அரசாங்கத்தின் முன்னணி உறுப்பினர்கள் பொதுவெளியில் வருவதற்கு தயங்கும் அளவுக்கு அரசாங்கம் பலவீனமாக இருந்தது. திருமண வைபவங்களில் கலந்துகொண்ட அரசாங்க உறுப்பினர்களை நோக்கி மக்கள் கூச்சல் போட்டு கேலி செய்த பல சம்பவங்கள் இடம்பெற்றன. மங்களகரமான வைபவங்கள் என்றும் பார்க்காமல் மக்கள் அரசியல்வாதிகளை நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு வந்ததற்காக கண்டனம் செய்தனர்.

தற்போது அரசியல்வாதிகள் பிரச்சினை ஏதும் வந்தால் பாதுகாப்பு தரப்பினர் அதைக் கையாளுவார்கள் என்ற நம்பிக்கையில் பயனமின்றி பொது வைபவங்களில் பங்கேற்கிறார்கள்

அதிகாரத்தில் இருப்பதிலேயே குறியாக இருக்கும் அரசியல் தலைவர்களைப பொறுத்தவரை, அதிகாரத்தை இழக்கும் சாத்தியம் ஒருபோதும் மகிழ்ச்சி தருவதாக இருக்காது.அமெரிக்கா போன்ற முன்னேறிய நாடுகளிலும் கூட இதுவே நிலைவரமாக இருக்கிறது.

2020 ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் அன்றைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது தோல்வியை ஏற்கமறுத்து தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றதாக குற்றச்சாட்டினார். வளர்முக நாடுகளில் அதிகாரத்தில் இருப்பவர்கள் தாங்கள் பதவியில் இருந்து இறங்கினால் பழிவாங்கப்படக் கூடும் என்ற அச்சத்தினால் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்கவேண்டும் என்பதில் தீவிர ஆர்வம் காட்டுகிறார்கள்.

அரசாங்கத்தில் இருப்பவர்களைப் பொறுத்தவரை, தேர்தல் தோல்விக்கு பின்னர் தாங்கள் முகங்கொடுக்கவேண்டியிருக்கும் முன்பின் தெராயாத சூழ்நிலை எப்போது அவர்களுக்கு அச்சம் தருவதாகும். அதுவும் புதிய அரசாங்கத்துக்கு வருகிறவர்கள் மிகவும் வேறுபட்ட அரசியல் கோட்பாட்டைக் கொண்டவர்களாக இருந்தால் தோல்வி கண்டவர்களின் பயம் மிகவும் கடுமையானதாக இருக்கும்.

**கையாளமுடியாத பிரச்சினை**

தற்போதைய அரசாங்கத்தின் பெரும்பகுதி நாட்டின் சகல பாகங்களில் இருந்தும் இலட்சக் கணக்கில் திரண்டு வந்து மக்கள் பங்கேற்ற போராட்ட இயக்கத்தின் முன்னால் மண்டியிட்ட அரசாங்கத்தின் ஒரு தொடர்ச்சியே. அந்த மகிழ்சசியானதும் அமைதியானதுமான போராட்ட நாட்களில் இளையவர்களும் முதியவர்களுமாக நடையாகவும் வாகனங்களிலும் வந்து அணிதிரண்ட மக்கள் நெருங்கிவிட்ட வரலாற்று முககியத்துவம் வாய்ந்த புரட்சியொன்றின் அங்கமாக தங்களின் செயற்பாடுகளை நினைத்தனர்.

பல்வேறு போராட்டக் களங்களுக்கும் வந்து அர்ப்பணிப்புச் சிந்தையுடன் பங்கேற்க மக்களைத் தூண்டிய "முறைமை மாற்றம்" ஒன்றுக்கான இலட்சிய நோக்கு அவர்கள் மனதில் தொடர்ந்து இருக்கிறது. வரவிருக்கும் தேர்தல்களில் பிரதானமாக பயனடையப் போகிறவர்கள்

(16ஆம் பக்கம் பார்க்க)



# 200 பேர் பயணிக்கக்கூடிய படகு காரைநகரில் தயாரிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், பெப். 22

காரைநகரில் தயாரிக்கப்பட்ட 200 பேர் பயணிக்கக் கூடிய பெரும் படகு நேற்று வெள்ளோட்டம் விடப்பட்டது.

மஹாசென் மரைனால் தயாரிக்கப்பட்ட இந்தப் படகுக்கு எக்கோ 80 என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் படகு காரைநகர் படகு முற்றத்தில் இருந்து கடலில் வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது.

80 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட இந்தப் படகு 40 தொன் எடை கொண்டது. இந்தப் படகில் 200 பேர் ஒரே தடவையில் பயணிக்க முடியும். இதில், உணவகமும் அமைந்துள்ளது. மின்சார தேவைக்கு 48 சூரிய தகடுகள் (சோலர் பனல்) அமைக்கப்பட்டுள்ளன.

பங்களாதேஷ் நிறுவனம் ஒன்றுக்காக 6 மாத காலத்தில் இந்த படகு தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.(ஐ)






# தனக்கென்று ஒரு மரபை...

ஊழலை ஒழித்து வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்கு செலுத்த வேண்டிய விலை நேர்மையான முறையில் பகிரப்படுவதை உறுதிசெய்யக் கூடிய முறைமை மாற்றத்துக்கான நம்பிக்கையை சிறந்த முறையில் வெளிக் காட்டக்கூடியவர்களே.

அரசாங்க மாற்றத்தைச் செய்வதற்கான சந்தர்ப்பம் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டியிருக்கும் அக்டோபர் மாதத்தில் வரும். அரசாங்கத்தில் உளளவர்கள் அந்த தேர்தல் இடம்பெறாதிருப்பதை அல்லது சாத்தியமானளவு நீண்டகாலத்துக்கு ஒத்திவைக்கப்படுவதை விரும்புவர்.

2022 மார்ச்சில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்படாமல் இருப்பதை அரசாங்கம் உறுதிசெய்தது. அந்த தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு தேவையான பணத்தை வழங்க மறுத்ததன் மூலம் அரசாங்கத்தினால் அவ்வாறு செய்யக் கூடியதாக இருந்தது.

அந்த தேர்தல்களை நடத்தக்கூடாது என்பதில் அரசாங்கம் மிகுந்த உறுதிப் பாட்டுடன் இருந்தது. தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு பணத்தைக் கிடைக்கச்செய்யுமாறு உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவையும் அரசாங்கம் மதிக்கவில்லை. அது ஜனநாயகக் கோட்பாடுகளை மலினப்படுத்தும் அடாவடித்தனமான நடவடிக்கையாகும். அதே காரணத்தை அல்லது வேறு காரணங்களைக் காட்டி ஜனாதிபதி தேர்தலும் ஒத்திவைக்கப்படலாம் என்ற கவலையும் உண்டு.

ஆனால், அரசியலமைப்பின் பிரகாரம் உரிய காலத்தில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி செயலகத்தின் ஊடகப்பிரிவு அறிவித்திருக்கிறது. பாராளுமன்ற தேர்தல் அடுத்த வருடம் நடத்தப்படும் என்றும் அதற்கு தேவையான நிதி 2025 பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் ஊடகப்பிரிவு அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

தேர்தல்களை நடத்துவது தேர்தல்கள் ஆணைக்குழுவின் பொறுப்பு என்றும் தேவைப்படும்போது அது குறித்து ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படும் என்றும் அரசாங்கம் கூறியிருக்கிறது.

ஜனாதிபதி தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படப்போவதில்லை என்றும் அண்மையில் தன்னைச் சந்தித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்றிடம் ஜனாதிபதி விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்." ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்கும் உத்தேசம் எதுவும் எனக்கு கிடையாது என்பதை பல தடவைகள் நான் தெளிவாகக் கூறியிருக்கிறேன். அதற்கு தேவையான பணம் இருக்கிறது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது பற்றிய கதைகளை பிரதான எதிர்க் கட்சியே கட்டிவிடுகிறது" என்று அவர் கூறினார்.

"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை அவசர அவசரமாக ஒழித்து விடமுடியாது என்பது எதிர்க்கட்சியை விடவும் மக்களுக்கு நன்றாகத் தெரியும். அதைச் செய்வதற்கு ஒழுங்கமைவான நடைமுறை ஒன்று இருக்கிறது. அவர்களின் பொறியில் நாம் விழுந்துவிடக் கூடாது. இதில் வீணாக நேரத்தை விரயம் செய்யாதீர்கள். நாம் முன்னெடுக்கின்ற பொருளாதார மீட்சி நடவடிக்கைகளைப் பற்றி பேசுங்கள்" என்றும் ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

அதே போன்றே, அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த உத்தரவிடுவதன் மூலமாக ஜனாதிபதி நாட்டின் மிகவும் கையாளமுடியாத பிரச்சினையாக இருந்துவரும் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதில் நாட்டத்தைக் காண்பிக்கலாம். அவ்வாறு செய்வதன் மூலமாக அடுத்த தேர்தலில் தேர்தலில் வெற்றிபெறுபவர் பரஸ்பரம் ஏற்புடைய தீர்வொன்றைக் காண்பதைச் எளிதாக்க முடியும். இதில் அவர் வெற்றி பெறுகிறாரோ இல்லையோ தான் இணங்கிக் கொண்டதையும் பொறுப்பேற்றுக் கொண்ட பணியையும் செய்ததாக ஒரு திருப்தியை உணரமுடியும்.

